Prepp.in

# Prepp

## Your Personal Exams Guide



| | | | |
|---|---|---|---|
| NDA | CDS | SSC CGL | CBSE UGC NET |
| IAS | SSC CHSL | CTET | MPSC |
| AFCAT | CSIR UDC NET | IBPS PO | UP POLICE |
| SSC MTS | SBI PO | BPSC | UPTET |
| IBPS RRB | IBPS CLERK | IES | UPSC CAPF |
| SSC Stenogr.. | RRB NTPC | SSC GD | RBI GRADE B |
| RBI Assistant | DSSSB | | |

# TNUSRB SI 2022 Tamil Eligibility Official Paper (Held on 25 June 2022)

**Total Time:** 1 Hour : 40 Minute

**Total Marks:** 100

## Instructions

| Sl No. | Section Name | No. of Question | Maximum Marks | Negative Marks | Positive Marks |
|---|---|---|---|---|---|
| 1 | Test | 100 | 100 | 0 | 1 |

1.) A total of 100 minutes is allotted for the examination.

2.) The server will set your clock for you. In the top right corner of your screen, a countdown timer will display the remaining time for you to complete the exam. Once the timer reaches zero, the examination will end automatically. The paper need not be submitted when your timer reaches zero.

3.) There will, however, be sectional timing for this exam. You will have to complete each section within the specified time limit. Before moving on to the next section, you must complete the current one within the time limits.

Prepp
Your Personal Exams Guide

Prepp Download Prepp APP GET IT ON Google Play

# Test

1. கீழ்வருவனவற்றுள் பொருந்தாத சொல்லைக் கண்டறிக (+1)

a. பெண்கல்வி

b. கைம்பெண்

c. மறுமணம்

d. பொதுவுடைமை

---

2. கீழ்க்காண்பனவற்றுள் சரியான தொடரைக் கண்டறிக. (+1)

a. என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.

b. எண் வீட்டுத் தோட்டத்தில் மலர் மணம் வீசின.

c. என் வீட்டுத் தோட்டத்திள் மலர் மநம் வீசின.

d. எண் வீட்டுத் தோட்டத்திள் மழர்கள் மணம் வீசின.

---

3. பிழையில்லாத் தொடரைத் தேர்ந்தெடுக்கவும். (+1)

a. பசு கன்றை ஈன்றன

b. மேகங்கள் சூழ்ந்து கொண்டது

c. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்

d. குழலி நடனம் ஆடினாள்

---

4. Intelligence - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக (+1)

a. அறிவு

b. வலிமை

c. நுண்ணறிவு

d. திறன்

---

5. 'Confidence' - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக. (+1)

a. வாக்கு

b. நம்பிக்கை

c. ஒப்பந்தம்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

d. குறிக்கோள்

6. பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியதே புதினமாகும். (+1)

a. கூட்டுக் குஞ்சுகள்

b. மண்ணகத்துப் பூந்துளிகள்

c. சேற்றில் மனிதர்கள்

d. குறிஞ்சித் தேன்

7. சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் முதலிய சிறுகதைத் தொகுப்புகளை எழுதியவர் யார்? (+1)

a. கந்தர்வன்

b. பூமணி

c. ராஜம் கிருஷ்ணன்

d. கு. அழகிரிசாமி

8. தன்னுடைய தமிழ் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் யார்? (+1)

a. வசந்தி தேவி

b. ராஜம் கிருஷ்ணன்

c. ரமணிச் சந்திரன்

d. மாலதி

9. உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைக் கூறும் புதினம் எது? (+1)

a. அலைவாய்க் கரையில்

b. வேருக்கு நீர்

c. கரிப்பு மணிகள்

d. சேற்றில் மனிதர்கள்

10. கலீல் கிப்ரான் நாட்டைச் சேர்ந்தவர். (+1)

a. இத்தாலி

b. அமெரிக்கா

c. லெபனான்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

d. போலந்து

11. தமிழ்ப் பண்பாடு என்ற இதழினைத் தொடங்கியவர் யார்? (+1)

a. பாரதிதாசன்

b. பாரதியார்

c. தனிநாயகம் அடிகள்

d. முடியரசன்

12. "பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும் (+1)

வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்" - என்று கூறியவர் யார்?

a. கவிஞர் கண்ணதாசன்

b. வாணிதாசன்

c. பாரதிதாசன்

d. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

13. பொருத்துக : (+1)

| | | | |
|---|---|---|---|
| 1) | முருங்கை | i) | மடல் |
| 2) | நெல் | ii) | புல் |
| 3) | அருகு | iii) | தாள் |
| 4) | தாழை | iv) | கீரை |

a. (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

b. (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

c. (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii)

d. (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)

14. குடும்ப நலத்திட்டம், கலப்புத் திருமணம் போன்றவற்றிற்கு வித்திட்டவர் (+1)

a. திலகர்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

b. அண்ணல் அம்பேத்கர்

c. வ. உ. சி

d. பெரியார்

---

15. பானை ஒரு சிறந்த கலையாகும். (+1)

a. செய்தல்

b. வனைதல்

c. முடைதல்

d. சுடுதல்

---

16. கீழ்க்கண்டவற்றுள் எது குமரகுருபரர் பாடிய நூல்? (+1)

a. முத்துக்குமார சாமி பிள்ளைத்தமிழ்

b. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

c. குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்

d. குலசேகரன் பிள்ளைத் தமிழ்

---

17. பகைவரை வெற்றிக் கொண்டவரைப் பாடும் இலக்கியம் (+1)

a. கலம்பகம்

b. பரணி

c. பரிபாடல்

d. அந்தாதி

---

18. **கூற்று 1 :** தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் பறை இடம் பெறுகிறது. (+1)

**கூற்று 2 :** 'தப்பாட்ட இசை' குறித்துத் தம்பாடலில் பதிவு செய்தவர் அருணகிரிநாதர்.

a. கூற்று 1 சரி

b. கூற்று 1 சரி 2 தவறு

c. கூற்று 2 சரி

d. கூற்று 1, 2 சரி

---

19. உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே ஆகும். (+1)

Prepp Download Prepp APP GET IT ON Google Play

**a.** கும்மிப் பாடல்

**b.** தாலாட்டுப் பாடல்

**c.** நாட்டுப்புறப் பாடல்

**d.** விளையாட்டுப் பாடல்

---

**20.** காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் இதனை என்பர். **(+1)**

**a.** அற இலக்கியம்

**b.** வாய்மொழி இலக்கியம்

**c.** நாட்டுப்புற இலக்கியம்

**d.** சங்க இலக்கியம்

---

**21.** பொருத்துக : **(+1)**

| | | | |
|---|---|---|---|
| 1) | உட்கார்ந்து உண்ண உதவுவது | i) | பட்டுப்பாய் |
| 2) | உட்காரவும், உண்ணவும் உதவுவது | ii) | பந்திப்பாய் |
| 3) | திருமணத்திற்கு உதவுவது | iii) | தடுக்குப்பாய் |
| 4) | குழந்தைகளைப் படுக்க வைப்பது | iv) | திண்ணைப்பாய். |

**a.** (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

**b.** (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

**c.** (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

**d.** (1) - (iii), (2) - (i), (3) - (ii), (4) - (iv)

---

**22.** பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது **(+1)**

**a.** புல்

**b.** நெல்

**c.** உப்பு

**d.** மிளகு

---

Prepp Download Prepp APP GET IT ON Google Play

23. வடதிசையிலிருந்து வீசும் காற்றை என்று அழைப்பர். (+1)

a. சாரல் காற்று

b. தென்றல் காற்று

c. ஊதைக் காற்று

d. வாடைக் காற்று

24. புகழ்பெற்ற மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் எந்த மாவட்டத்தில் உள்ளது? (+1)

a. செங்கல்பட்டு மாவட்டம்

b. சென்னை மாவட்டம்

c. காஞ்சிபுரம் மாவட்டம்

d. விழுப்புரம் மாவட்டம்

25. சேரர்களின் நாடு எனப்பட்டது. (+1)

a. கொங்கு நாடு

b. சேர நாடு

c. பாண்டிய நாடு

d. குடநாடு

26. சங்க நூல்களில் பண்ணோடு பாடப்பட்ட நூல் (+1)

a. புறநானூறு

b. பரிபாடல்

c. அகநானூறு

d. நற்றிணை

27. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் (+1)

a. குறுந்தொகை

b. கலித்தொகை

c. அகநானூறு

d. புறநானூறு

Prepp Download Prepp APP GET IT ON Google Play

28. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று (+1)

a. குறுந்தொகை

b. நற்றிணை

c. மலைபடுகடாம்

d. பரிபாடல்

29. முல்லைப்பாட்டு நூல்களுள் ஒன்று. (+1)

a. எட்டுத்தொகை

b. பாட்டியல்

c. பதினெண் கீழ்க்கணக்கு

d. பத்துப்பாட்டு

30. தமிழின் முதல் காப்பியம் ஆகும். (+1)

a. மணிமேகலை

b. மகாபாரதம்

c. தொல்காப்பியம்

d. சிலப்பதிகாரம்

31. திருப்பாவையைத் தழுவி 'கன்னிப்பாவை' என்னும் நூலை எழுதியவர் யார்? (+1)

a. வண்ணதாசன்

b. வாணிதாசன்

c. கண்ணதாசன்

d. இறையரசன்

32. வாணிதாசனுக்குச் செவாலியர் விருது எந்த அரசால் வழங்கப்பட்டது? (+1)

a. பிரெஞ்சு அரசு

b. இந்திய அரசு

c. சீன அரசு

d. ரஷ்ய அரசு

Prepp Download Prepp APP GET IT ON Google Play

33. 'உழுபவருக்கே நில உரிமை இயக்கம்' தொடங்கி உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்த பெண்மணி (+1)

a. சின்னப்பிள்ளை

b. ராஜம் கிருஷ்ணன்

c. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

d. பாலசரஸ்வதி

34. இந்திய தேசிய இராணுவத்தில் உருவாக்கப்பட்ட பெண்கள் படையின் பெயர் (+1)

a. இராஜாமணி

b. ஜானகி

c. ஜான்சிராணி

d. லட்சுமி

35. 'களஞ்சியம்' என்ற பெயரில் மகளிர் குழு ஆரம்பித்தவர் (+1)

a. ராஜம் கிருஷ்ணன்

b. பாலசரஸ்வதி

c. சின்னப்பிள்ளை

d. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

36. "இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு (+1)

ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை" இப்பாடல் வரிகளின் ஆசிரியர் யார்?

a. பெருவாயின் முள்ளியார்

b. முள்ளியார்

c. இடைக்கண் முள்ளியார்

d. ஔவையார்

37. நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட அடியார்களின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ள நூல் (+1)

a. திருமந்திரம்

b. திருத்தொண்டத்.தொகை

c. திருத்தொண்டர் திருவந்தாதி

Prepp Download Prepp APP GET IT ON Google Play

d. பெரிய புராணம்

38. சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராக இருந்தவர் (+1)

a. சேக்கிழார்

b. சுந்தரர்

c. திருஞான சம்பந்தர்

d. வள்ளலார்

39. "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே (+1)

அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" - இவ்வரிகளின் ஆசிரியர் யார்?

a. கலீல் கிப்ரான்

b. பாரதியார்

c. தாயுமானவர்

d. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

40. குற்றாலக்குறவஞ்சி எந்த மலையின் பெருமையைக் கூறுகிறது? (+1)

a. மேருமலை

b. குற்றால மலை

c. பொதிகை மலை

d. விந்திய மலை

41. "நன்றாற்றல்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது (+1)

a. நன் + றாற்றல்

b. நன்று + ஆற்றல்

c. நல்ல + ஆற்றல்

d. நன்றாற் + றல்

42. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் (+1)

a. திரிந்ததற்று

b. திரிந்தற்று

Your Personal Exams Guide

Prepp Download Prepp APP GET IT ON Google Play

c. திரிந்துற்று

d. திரிவுற்று

43. "எளிது" என்னும் சொல்லின் எதிர்ச்சொல் (+1)

a. அரிது

b. சிறிது

c. பெரிது

d. வறிது

44. "இளமை" என்னும் சொல்லின் எதிர்ச்சொல் (+1)

a. முதுமை

b. புதுமை

c. தனிமை

d. இனிமை

45. பின்வருவனவற்றுள் பொருந்தாத சொல்லைக் கண்டறிக (+1)

a. பாவேந்தர்

b. புரட்சிக்கவி

c. பகுத்தறிவு

d. சுப்புரத்தினம்

46. மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா . . . என்று பாடியவர் (+1)

a. கவிமணி

b. பாரதியார்

c. பாரதிதாசன்

d. நாமக்கல் கவிஞர்

47. திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் யார்? (+1)

a. மணக்குடவர்

b. பரிமேலழகர்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

c. தருமர்

d. பரிதி

48. "தொண்டு செய்து பழுத்த பழம் (+1)

தூய தாடி மார்பில் விழும்

மண்டைச் சுரப்பை உலகு தொழும்" - என்று தந்தைப் பெரியாரைப் பாடியவர்

a. பாரதியார்

b. பாரதிதாசன்

c. வாணிதாசன்

d. கவிமணி

49. "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் (+1)

குறுகத் தரித்த குறள்" - என்று பாராட்டியவர்

a. தொல்காப்பியர்

b. கபிலர்

c. ஔவையார்

d. பரணர்

50. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர் (+1)

a. இரா.பி. சேது

b. வைரமுத்து

c. கல்கி

d. சு. வெங்கடேசன்

51. கீழ்க்காண்பவற்றுள் சரியான தொடரைத் தேர்க (+1)

a. வினைத்தொகையில் வல்லினம் மிகாது

b. உம்மைத்தொகையில் வல்லினம் மிகும்

c. உவமைத்தொகையில் வல்லினம் மிகாது

d. உருவகத்தில் வல்லினம் மிகாது

Prepp Download Prepp APP GET IT ON Google Play

52. பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து (+1)

a. மெல்லினம் மிகும்

b. மெல்லினம் மிகாது

c. வல்லினம் மிகும்

d. வல்லினம் மிகாது

---

53. வல்லினம் மிகும் இடங்களில் சரியானதைத் தேர்க. (+1)

a. எழுதியப்பாடல்

b. இலைப் பறித்தேன்

c. எனக்குத்தெரியும்

d. எதுக் கிடைத்தது

---

54. ஆசாரக்கோவை - என்பதன் பொருள் யாது? (+1)

a. நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு

b. நல்ல பாடல்களின் தொகுப்பு

c. நல்ல அறிவுரைகளின் தொகுப்பு

d. நல்ல நூல்களின் தொகுப்பு

---

55. "காக்குவது ஏதேனில் விரதம் காக்கவே" - இத்தொடரில் விரதம் என்பதன் பொருள் என்ன? (+1)

a. நற்செயல்

b. சினம்

c. அறிவு

d. நன்னெறி

---

56. தொல்காப்பியத்தில் அமைந்துள்ள இயல்கள் (+1)

a. இருபத்தேழு

b. ஒன்பது

c. பதினெட்டு

d. மூன்று

---

Prepp Download Prepp APP GET IT ON Google Play

57. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்களின் முறை வைப்பு (+1)

a. சொல், பொருள், எழுத்து

b. எழுத்து, சொல், பொருள்

c. சொல், எழுத்து, பொருள்

d. எழுத்து, பொருள், சொல்

58. "வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்" - என்னும் வரிகள் இடம்பெறும் நூல் (+1)

a. வளையாபதி

b. கம்பராமாயணம்

c. சிலப்பதிகாரம்

d. மணிமேகலை

59. காற்றின் ஆற்றலை "வளி மிகின் வலி இல்லை" என்று கூறும் நூல் எது? (+1)

a. புறநானூறு

b. திருக்குறள்

c. திருமந்திரம்

d. சித்தர் பாடல்கள்

60. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது (+1)

a. காற்று

b. நாவாய்

c. மணல்

d. கடல்

61. மரபுக்கவிதை எழுதுவதற்கான இலக்கணம் எது? (+1)

a. எழுத்து இலக்கணம்

b. சொல் இலக்கணம்

c. யாப்பு இலக்கணம்

d. அணி இலக்கணம்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

62. ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது (+1)

a. எழுத்து

b. தளை

c. சீர்

d. அடி

63. செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது (+1)

a. முரண்

b. இயைபு

c. மோனை

d. எதுகை

64. பொருத்துக : (+1)

| | | | |
|---|---|---|---|
| 1) | வெண்பா | i) | அகவல் ஓசை |
| 2) | ஆசிரியப்பா | ii) | தூங்கல் ஓசை |
| 3) | கலிப்பா | iii) | செப்பல் ஓசை |
| 4) | வஞ்சிப்பா | iv) | துள்ளல் ஓசை |

a. (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

b. (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

c. (1) - (i), (2) - (iv), (3) - (iii), (4) - (ii)

d. (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

65. அகவல் ஓசையை உடைய 'பா' வகை (+1)

a. வஞ்சிப்பா

b. கலிப்பா

c. வெண்பா

Prepp Download Prepp APP GET IT ON Google Play

d. ஆசிரியப்பா

66. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் என அழைக்கப்படும். (+1)

a. இறுதி

b. எழுதி

c. தொகுதி

d. பகுதி

67. "சல்லி" என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற குறிக்கும். (+1)

a. பணமுடிப்பைக்

b. மணிகளைக்

c. கயிற்றைக்

d. வளையத்தினை

68. **கூற்று 1 :** விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல் கருவிகள். (+1)

**கூற்று 2 :** காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை கஞ்சக் கருவிகள்.

a. கூற்று 1 சரி 2 தவறு

b. கூற்று 1 தவறு 2 சரி

c. கூற்று 1, 2 தவறு

d. கூற்று 1, 2 சரி

69. 'தேடிய செல்வத்தைச் செலவழிக்காமல் (+1)

புதைத்து வைப்பது மடமை' - என்று கூறியவர் யார்?

a. கபிலர்

b. பரணர்

c. காக்கைபாடினியார்

d. ஔவையார்

70. என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது. (+1)

a. மாடு அணைதல்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

b. எருதுகட்டி

c. சல்லிக்கட்டு

d. வேலி மஞ்சுவிரட்டு

71. பொருத்துக : (+1)

| | | | |
|---|---|---|---|
| 1) | நடந்து | i) | முற்றெச்சம் |
| 2) | பேசிய | ii) | குறிப்புப் பெயரெச்சம் |
| 3) | எடுத்தனன் உண்டான் | iii) | பெயரெச்சம் |
| 4) | பெரிய | iv) | வினையெச்சம் |

a. (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

b. (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

c. (1) - (i), (2) - (iii), (3) - (ii), (4) - (iv)

d. (1) - (ii), (2) - (iv), (3) - (iii), (4) - (i)

72. ஒரே சொல் பல முறை அடுக்கி வரும் தொடர் எவ்வகைத் தொடர்? (+1)

a. இரட்டைக்கிளவி

b. உரிச்சொல் தொடர்

c. எழுவாய்த் தொடர்

d. அடுக்குத்தொடர்

73. 'துஞ்சினார்' எனும் சொல் எவ்வகைச் சொல்? (+1)

a. மங்கலம்

b. குழூஉக் குறி

c. இடக்கரடக்கல்

d. மரூஉ

74. இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல்லை எவ்வாறு அழைப்பர்? (+1)

Prepp Download Prepp APP GET IT ON Google Play

a. இலக்கணப் போலி

b. மரூஉ

c. இலக்கணமுடையது

d. முன்பின்னாகத் தொக்க போலி

75. 'இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது' என்பது ஆகும். (+1)

a. முதலாகு பெயர்

b. சினையாகு பெயர்

c. தொழிலாகு பெயர்

d. பண்பாகு பெயர்

76. நேதாஜி அவர்கள் தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க கப்பலில் பயணம் செய்து எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு வந்தடைந்தார்? (+1)

a. மலேசியாவிலிருந்து பர்மா

b. மலேசியாவிலிருந்து ஜப்பான்

c. சிங்கப்பூரிலிருந்து ஜெர்மனி

d. ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர்

77. திராவிட மகாஜன சங்கத்தைத் தோற்றுவித்தவர் (+1)

a. அம்பேத்கர்

b. அயோத்திதாசர்

c. பெரியார்

d. காளிதாசர்

78. கல்வியறிவு இல்லாத பெண்கள் போன்றவர்கள் என்றார் பாரதிதாசன். (+1)

a. பண்படாத நிலம்

b. திருத்திய கழனி

c. பண்பட்ட நிலம்

d. உழுநிலம்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

79. கீழ்வருவனவற்றுள் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் ஒன்று எது? (+1)

a. கொய்யாக்கனி

b. தைப்பாவை

c. தண்டமிழ்க்கனி

d. மாங்கனி

80. கீழ்க்காணும் நூல்களுள் கவிஞர் வாணிதாசன் அவர்கள் எழுதிய நூல் எது? (+1)

a. கொடிமுல்லை

b. கண்ணன் பாட்டு

c. இருண்ட வீடு

d. அழகின் சிரிப்பு

81. வினை என்னும் சொல்லுக்குரிய பொருள் யாது? (+1)

a. அயல்

b. செயல்

c. வயல்

d. கயல்

82. எட்டாம் வேற்றுமையை வேற்றுமை என்று அழைப்பர். (+1)

a. எழுவாய்

b. செயப்படுபொருள்

c. விளி

d. பயனிலை

83. வட்டம், செம்மை, தீமை இவை எவ்வகைப் பெயர்கள்? (+1)

a. சினைப்பெயர்

b. பொருட்பெயர்

c. காலப்பெயர்

d. பண்புப்பெயர்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

84. **கூற்று 1 :**ஏவல் வினைமுற்று முன்னிலையில் வரும். (+1)

**கூற்று 2 :** ஏவல் வினைமுற்று விகுதி பெற்றே வரும்.

a. கூற்று 2 மட்டும் சரி

b. கூற்று 1 சரி கூற்று 2 தவறு

c. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

d. கூற்று 1, 2 சரி

---

85. பின்வரும் வினைமுற்றுகளில் வேர்ச்சொல்லுடன் சரியாக இணைந்துள்ள ஒன்றைத் தேர்க. (+1)

a. பேசினாள் - பேசி

b. தருகின்றனர் - தரு

c. நடக்கிறது - நட

d. வருக - வரு

---

86. பொருத்துக : (+1)

| | | | |
|---|---|---|---|
| 1) | கலாம் | i) | மன்றம் |
| 2) | குழீஇ | ii) | குற்றம் |
| 3) | தோம் | iii) | போர் |
| 4) | கோட்டி | iv) | ஒன்றுகூடி |

a. (1) - (iv), (2) - (i), (3) - (iii), (4) - (ii)

b. (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

c. (1) - (iii), (2) - (i), (3) - (ii), (4) - (iv)

d. (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

---

87. கீழ்க்கண்ட நூல்களில் எது இளங்கோவடிகள் இயற்றியது? (+1)

a. தொல்காப்பியம்

b. கம்பராமாயணம்

c. சிலப்பதிகாரம்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

d. மணிமேகலை

88. நீலகேசி காப்பியங்களுள் ஒன்று. (+1)

a. ஐம்பெருங்காப்பியங்களுள்

b. பௌத்த சமயக் காப்பியங்களுள்

c. ஐஞ்சிறு காப்பியங்களுள்

d. வைணவ சமயக் காப்பியங்களுள்

89. உடல் நோய்க்கு தேவை என அறிவியல் ஆத்திசூடி கூறுகிறது. (+1)

a. இனிப்பு

b. ஔடதம்

c. உணவு

d. உடை

90. "சிறுபஞ்சமூலம்" என்ற நூலின் ஆசிரியர் யார்? (+1)

a. காரியாசான்

b. ஔவையார்

c. பெருவாயின் முள்ளியார்

d. பரணர்

91. கூற்று 1 : ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது. (+1)
கூற்று 2 : ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.

a. கூற்று 1 மட்டும் சரி

b. கூற்று 2 மட்டும் சரி

c. கூற்று 1 சரி கூற்று 2 தவறு

d. கூற்று 1, 2 சரி

92. ஔ என்ற நெட்டெழுத்துக்கு இன எழுத்தாக வருவது (+1)

a. இ

b. ஒ

Prepp Download Prepp APP GET IT ON Google Play

c. எ

d. உ

93. தவறானது எது கண்டறிக? (+1)
1) குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 1/2 மாத்திரை
2) நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 2 மாத்திரை
3) ஆய்த எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 1 மாத்திரை
4) மெய் எழுத்தை ஒலிக்கும் கால அளவு - 1/2 மாத்திரை

a. 1, 3

b. 2, 4

c. 1, 2

d. 3, 4

94. அ, இ, ஐ, ஒ - ஆகிய நான்கில் நீண்டு ஒலிக்கும் எழுத்தைக் கண்டறிக (+1)

a. அ

b. இ

c. ஐ

d. ஒ

95. ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரி வடிவமாக எழுதப்படுவதும் எனப்படுகிறது. (+1)

a. சொல்

b. எழுத்து

c. யாப்பு

d. பொருள்

96. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் (+1)

காண்ப தறிவு". விடுபட்ட சொல்லை எழுதுக.

a. மெய்ப்பொருள்

b. வன்பொருள்

c. செய்பொருள்

d. உயர்பொருள்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

97. **கூற்று 1 :** திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். (+1)

**கூற்று 2 :** உலகப்பொது மறை எனப் போற்றப்படும் நூல் திருவாசகம்.

**a.** கூற்று 1 சரி 2 தவறு

**b.** கூற்று 1, 2 சரி

**c.** கூற்று 1 தவறு 2 சரி

**d.** கூற்று 1, 2 தவறு

---

98. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் எது? (+1)

**a.** சொல்மணிமாலை

**b.** தெய்வமணிமாலை

**c.** சொல்மாலை

**d.** திருவள்ளுவமாலை

---

99. "தத்தம் கருமமே கட்டளைக் கல்" - எதற்கு என்று வள்ளுவர் கூறுகிறார்? (+1)

**a.** எண்ணிற்கும், எழுத்திற்கும்

**b.** பெருமைக்கும், சிறுமைக்கும்

**c.** சீருக்கும், சிறப்புக்கும்

**d.** தானத்திற்கும், தவத்திற்கும்

---

Your Personal Exams Guide

100. பொருத்துக : (+1)

| | | | |
|---|---|---|---|
| 1) | பயனில்லாத களர் நிலம் | i) | எரிமுன்னர் வைத்தூறு |
| 2) | புகழாலும் பழியாலும் அறியப்படுவது | ii) | கல்லாதவர் |
| 3) | புலிதோல் போர்த்திய பசு | iii) | நடுவுநிலைமை |
| 4) | வருமுன்னர் காவாதான் வாழ்க்கை | iv) | மனதை அடக்க இயலாதவர் |

**a.** (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv)

**b.** (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

**c.** (1) - (i), (2) - (iv), (3) - (ii), (4) - (iii)

Prepp Download Prepp APP GET IT ON Google Play

d. (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

Your Personal Exams Guide

Download Prepp APP
GET IT ON Google Play

## Answers

1. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: <u>**பொதுவுடைமை**</u>

⭐ Key Points

- பெண்கல்வி, கைம்பெண், மறுமணம் ஆகியவை பெண்களைச் சார்ந்த அல்லது பெண்களுக்கு ஏற்படும் நிகழ்வு/நிலையாகும்.
- பொதுவுடைமை என்பது **உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல்** சமுதாயத்தில் அனைவருக்கும் அனைத்துப் பொருளும் கிடைக்கச் செய்வது ஆகும். எனவே பொதுவுடைமை என்பதே பொருந்தாத சொல்லாகும்.

⭐ Additional Information

- **விதவைகள் மறுமணச் சட்டம் 1856** ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.
- **கைம்பெண்** - கணவனை இழந்த பெண்.

---

2. **Answer: a**

**Explanation:**

சரியான பதில்: Option 1

⭐ Key Points

- **என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின** - என்பது சரியான தொடர் ஆகும்.

⭐ Additional Information

- எண் விட்டுத் தோட்டத்தில் மலர் மணம் வீசின, என் விட்டுத் தோட்டத்திள் மலர் **மநம்** விசின, எண் விட்டுத் தோட்டத்திள் மழர்கள் மணம் விசின - இவை எழுத்துப்பிழைகள் உள்ள வாக்கியங்கள் ஆகும்.

**தன்மை:**

- பேசுபவர் **தன்னைக்** குறிப்பது **தன்மை** எனப்படும்.
- **வகைகள்:**
  - தன்மை ஒருமை, தன்மைப் பன்மை

**படர்க்கை:**

- **தன்மையும் முன்னிலையும் அல்லாத மற்றொருவரை** அல்லது பிற பொருளைக் குறிப்பது **படர்க்கை** எனப்படும்.
- வகைகள்:
  - படர்க்கை ஒருமை, படர்க்கைப் பன்மை.

---

3. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: <u>**குழலி நடனம் ஆடினாள்**</u>

Prepp Download Prepp APP GET IT ON Google Play

★ Key Points

- **குழலி நடனம் ஆடினாள்** என்பது பிழை இல்லாத தொடர் ஆகும்.
- பசு கன்றை ஈன்றன - இதில் **ஈன்றன** என்பது **பன்மையில்** உள்ளது.
- மேகங்கள் சூழ்ந்து கொண்டது - இதில் **கொண்டது** என்பது **ஒருமையில்** உள்ளது.
- கோவலன் சிலம்பு விற்கப் போனாள் - இதில் **போனாள்** என **பெண்பாலில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

★ Additional Information

- மலையேறிய மக்கள் மாலையின் வேகவேகமாய்க் கீழிறங்கினர் - **மலையேறி** மக்கள் **மாலையில்** வேகவேகமாய்க் கீழிறங்கினர்.
- சிட்டுக்கு சிறகுகள் முளைத்தது. - சிட்டுக்கு சிறகுகள் **முளைத்தன.**

---

4. **Answer: c**

**Explanation:**

சரியான பதில்: **நுண்ணறிவு**

★ Key Points

- Intelligence - **நுண்ணறிவு**
- Strength - **வலிமை**
- Knowledge - **அறிவு**
- Ability - **திறன்**

★ Additional Information

- Escalator - **நகரும் மின்படி**
- Straw - **நெகிழிக்குழல்**
- Blog - **வலைப்பூ**
- Carrom - **நாலாங்குழி ஆட்டம்**

---

5. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: **நம்பிக்கை**

★ Key Points

- Confidence - **நம்பிக்கை**
- Contract - **ஒப்பந்தம்**
- Objective - **குறிக்கோள்**
- Vote - **வாக்கு**

★ Additional Information

- Linguistics - **மொழியியல்**
- Estimate - **மதிப்பீடு**
- Cloth store - **துணியங்காடி**
- Design - **வடிவமைப்பு**

Your Personal Exams Guide

prepp Download Prepp APP GET IT ON Google Play

6. **Answer: b**

**Explanation:**

சரியான விடை: **மண்ணகத்துப் பூந்துளிகள்.**

⭐ Key Points

- **மண்ணகத்துப் பூந்துளிகள், சேற்றில் மனிதர்கள், குறிஞ்சித் தேன், கூட்டுக் குஞ்சுகள்** ஆகிய நூல்களை இயற்றியவர் **ராஜம் கிருஷ்ணன்.**

⭐ Additional Information

ராஜம் கிருஷ்ணன்:

- ஊர்: முசுறி (திருச்சிராப்பள்ளி).
- வேருக்கு நீர் என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி விருதுப்பெற்றார்.
- முக்கியமான படைப்புகள்: உத்தர காண்டம், குறுஞ்சித்தேன், வளைக்கரம், வேருக்கு நீர் (சாகித்ய அகாடெமி விருது பெற்றது), மலர்கள்,முள்ளும் மலர்ந்தது, பாதையில் படிந்த அடிகள், கரிப்பு மணிகள், மண்ணகத்துப் புத்துளிகள், சத்திய வேள்வி, சூழலில் மிதக்கும் தீபங்கள்.
- **பெண் குரல்** எனும் நூலுக்காக **கலை மகள் விருது** பெற்றார்.
- 1991ஆம் ஆண்டு **திரு.வி.க விருதைப்** பெற்றார்.
- இவரது நூல்கள் 2009ஆம் ஆண்டு **அரசுடைமை** ஆக்கப்பட்டன.

7. **Answer: a**

**Explanation:**

சரியான விடை: **கந்தர்வன்.**

⭐ Key Points

**கந்தர்வன்:**

- **எழுத்தாளர், கவிஞர்.**
- இயற்பெயர்: **நாகலிங்கம்.**
- **சில படைப்புகள்:**
  - **கவிதை நூல்கள்:** கிழிசல்கள், மீசைகள், சிறைகள், கந்தர்வன் கவிதைகள்.
  - **சிறுகதைத் தொகுப்பு நூல்கள்:** சாசனம், பூவுக்குக் கீழே, கொம்பன், ஒவ்வொரு கல்லாய், அப்பாவும் மகனும், தண்ணீர்.

⭐ Additional Information

**பூமணி:**

- இயற்பெயர்: **பூ.மாணிக்கவாசகம்.**
- இவர் எழுதிய **அஞ்ஞாடி** எனும் நூலுக்கு **சாகித்ய அகாதெமி விருதை 2014ஆம் ஆண்டு** பெற்றார்.
- 2011ஆம் ஆண்டு **விஷ்ணுபுரம் விருதைப்** பெற்றார்.
- **சில படைப்புகள்:**
  - **சிறுகதைத் தொகுப்பு:** வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள், நல்லநாள்.
  - **புதினங்கள்:** வெக்கை, நைவேத்தியம், வரப்புகள், வாய்க்கால், பிறகு, அஞ்ஞாடி.

கு. அழகிரிசாமி:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- எழுத்தாளர், பத்திரிகையாளர்.
- **சக்தி**, **தமிழ் நேசன்** (**மலேசியா**), **பிரசண்ட விகடன்**, **சோவியத் நாடு** ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர்.
- இவர் எழுதிய **அன்பளிப்பு** எனும் நூலுக்கு **1970ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது** பெற்றார்.
- **சில படைப்புகள்**:
    - **புதினங்கள்**: டாக்டர் அனுராதா, தீராத விளையாட்டு, புது வீடு புது உலகம், வாழ்க்கைப் பாதை.
    - **சிறுகதைத் தொகுப்பு**: அன்பளிப்பு, சிரிக்கவில்லை, தவப்பயன், கவியும் காதலும், புதிய ரோஜா, துறவு.
    - **கட்டுரைத் தொகுப்பு**: இலக்கியத்தேன், தமிழ்தந்த கவியின்பம், நான் கண்ட எழுத்தாளர்கள்.

ராஜம் கிருஷ்ணன்:

- ஊர்: முசுறி (திருச்சிராப்பள்ளி).
- வேருக்கு நீர் என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி விருதுப்பெற்றார்.
- முக்கியமான படைப்புகள்: உத்தர காண்டம், குறுஞ்சித்தேன், வளைக்கரம், வேருக்கு நீர் (சாகித்ய அகாடெமி விருது பெற்றது), மலர்கள்,முள்ளும் மலர்ந்தது, பாதையில் படிந்த அடிகள், கரிப்பு மணிகள், மண்ணகத்துப் புத்துளிகள், சத்திய வேள்வி, சூழலில் மிதக்கும் தீபங்கள்.
- பெண் குரல் எனும் நூலுக்காக கலை மகள் விருது பெற்றார்.
- 1991ஆம் ஆண்டு திரு.வி.க விருதைப் பெற்றார்.
- இவரது நூல்கள் 2009ஆம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன.

---

8. **Answer: b**

**Explanation:**

சரியான விடை: **ராஜம் கிருஷ்ணன்**.

★ Key Points

- தன்னுடைய தமிழ் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் - **ராஜம் கிருஷ்ணன்**.

ராஜம் கிருஷ்ணன்:

- ஊர்: முசுறி (திருச்சிராப்பள்ளி).
- வேருக்கு நீர் என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி விருதுப்பெற்றார்.
- முக்கியமான படைப்புகள்: உத்தர காண்டம், குறுஞ்சித்தேன், வளைக்கரம், வேருக்கு நீர் (சாகித்ய அகாடெமி விருது பெற்றது), மலர்கள்,முள்ளும் மலர்ந்தது, பாதையில் படிந்த அடிகள், கரிப்பு மணிகள், மண்ணகத்துப் புத்துளிகள், சத்திய வேள்வி, சூழலில் மிதக்கும் தீபங்கள்.
- பெண் குரல் எனும் நூலுக்காக கலை மகள் விருது பெற்றார்.
- 1991ஆம் ஆண்டு திரு.வி.க விருதைப் பெற்றார்.
- இவரது நூல்கள் 2009ஆம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன.

★

Additional Informationவசந்தி தேவி:

- **கல்வியாளர்**, **சமூக ஆர்வலர்**.
- **மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தராக** பணியாற்றியவர்.
- **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவராக** பணியாற்றியவர்.
- **தமிழ்நாடு திட்டக்குழு உறுப்பினராக** பணியாற்றியவர்.

ரமணிச் சந்திரன்:

- இவருடைய "**வண்ணவிழிப் பார்வையிலே**" எனும் நெடுங்கதைக்கு **2003**ஆம் ஆண்டிற்கான **சி.பா. ஆதித்தனார் இலக்கியப்பரிசு** வழங்கப்பட்டது.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- சில படைப்புகள்: **ஜோடிப் புறாக்கள், வாழ்வு என் பக்கம், ஆசை ஆசை ஆசை, அவனும் அவளும், எனது சிந்தனை மயங்குதடி, இறைவன் கொடுத்த வரம், இது ஒரு உதயம், நெஞ்சே நீ வாழ்க, பொன் மானை தேடி, வலை ஓசை.**

மாலதி மைத்திரி:

- **கவிஞர், எழுத்தாளர்.**
- "**அணங்கு**" எனும் பெண்ணிய இலக்கிய இதழினை நடத்தி வருகிறார்.
- **சில படைப்புகள்:**
    - **கவிதைத் தொகுப்பு:** சங்கராபரணி, நீரின்றி அமையாது உலகு, நீலி, எனது மதுக்குடுவை, கடல் ஒரு நீலச் சொல், முள் கம்பிகளால் கூடு பின்னும் பறவை.
    - **கட்டுரைத் தொகுப்பு:** விடுதலையை எழுதுதல், நம் தந்தையரைக் கொல்வதெப்படி, வெட்டவெளி சிறை.

---

9. **Answer: c**

**Explanation:**

சரியான விடை: **கரிப்பு மணிகள்**.

⭐ Key Points

- **கரிப்பு மணிகள்** எனும் நூலை இயற்றியவர் **ராஜம் கிருஷ்ணன்**.
- **சேற்றில் மனிதர்கள்** எனும் நூலை இயற்றியவர் **ராஜம் கிருஷ்ணன்**. இந்நூலுக்காக **பாரதிய பாஷா பரிஷத் பரிசு** மற்றும் **இலக்கியச் சிந்தனை பரிசு** வழங்கப்பட்டது.
- **அலைவாய்க் கரையில்** எனும் நூலை இயற்றியவர் **ராஜம் கிருஷ்ணன்**.
- **வேருக்கு நீர்** எனும் நூலை இயற்றியவர் **ராஜம் கிருஷ்ணன்**. இந்நூலுக்காக **சாகித்ய அகாதெமி விருது** வழங்கப்பட்டது.

⭐ Additional Information

ராஜம் கிருஷ்ணன்:

- ஊர்: முசுறி (திருச்சிராப்பள்ளி).
- வேருக்கு நீர் என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி விருதுப்பெற்றார்.
- முக்கியமான படைப்புகள்: உத்தர காண்டம், குறுஞ்சித்தேன், வளைக்கரம், வேருக்கு நீர் (சாகித்ய அகாடெமி விருது பெற்றது), மலர்கள்,முள்ளும் மலர்ந்தது, பாதையில் படிந்த அடிகள், கரிப்பு மணிகள், மண்ணகத்துப் புத்துளிகள், சத்திய வேள்வி, சுழலில் மிதக்கும் தீபங்கள்.
- பெண் குரல் எனும் நூலுக்காக கலை மகள் விருது பெற்றார்.
- 1991ஆம் ஆண்டு திரு.வி.க விருதைப் பெற்றார்.
- இவரது நூல்கள் 2009ஆம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன.

---

10. **Answer: c**

**Explanation:**

சரியான விடை: **லெபனான்**.

⭐ Key Points

- கலீல் கிப்ரான் **லெபனான்** நாட்டைச் சேர்ந்தவர்.
- கலீல் கிப்ரான் சிறுவயதிலேயே **அமெரிக்காவில்** குடியேறினார்.

**கலீல் கிப்ரான்:**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- **கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர்.**
- இவர் முதலில் அரபு மொழியில் எழுதி வந்தாலும் பின்னர் அங்கிகத்திலும் எழுதினார்.
- இவருடைய **"THE PROPHET"** (தி ப்ராஃபெட்) எனும் நூல் மிகவும் புகழ்ப்பெற்றது. அந்நூலை தமிழில் **"தீர்க்கதரிசி"** எனும் தலைப்பில் **கவிஞர் புவியரசு** மொழிபெயர்த்துள்ளார்.

⭐ Additional Information

கவிஞர் புவியரசு:

- **கவிஞர், மொழிபெயர்ப்பாளர்.**
- **கையொப்பம்** என்னும் நூலுக்காக **2009** ஆண்டு தமிழுக்கான **சாகித்ய அகாதெமி விருதைப்** பெற்றார்.
- **புரட்சிக்காரன்** என்னும் நூலுக்காக **2006** ஆண்டு **மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி விருதைப்** பெற்றார்.
- இவருக்கு **கேரள பண்பாட்டு மையம், சாகித்ய புரஸ்கார் விருது** வழங்கியது.
- இவர் எழுதிய **முக்கூடல்** எனும் நூலுக்கு **தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2004ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலுக்கான பரிசு (புதுக்கவிதை பிரிவில்)** வழங்கப்பட்டது.
- **சில படைப்புகள்:**
  - **நாடகங்கள்:** மனிதன், மூன்றாம் பிறை.

---

11. **Answer: c**

**Explanation:**

சரியான விடை: **தனிநாயகம் அடிகள்.**

⭐ Key Points

- தமிழ்ப் பண்பாடு என்ற இதழினைத் தொடங்கியவர் - **தனிநாயகம் அடிகள்.**

தனிநாயகம் அடிகள்:

- இயற்பெயர்: **சேவியர் தனிநாயகம்.**
- நாடு: **இலங்கை (யாழ்ப்பாணம்).**
- **ஆங்கிலம்** தவிர **ஏசுப்பானியம், உரோம மொழி, போர்த்துகீசியம், பிரஞ்சு** ஆகிய மொழிகளை கற்றறிந்தவர்.
- இவர் **1952**ஆம் ஆண்டு **TAMIL CULTURE** எனும் ஆங்கில காலாண்டு இதழினை தொடங்கினார்.
- **உலகத் தமிழாராய்ச்சி மையம்** உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்.
- சில படைப்புகள்: **தமிழ்த்தூது, தமிழர் பண்பாடு நேற்றும் இன்றும் நாளையும், ஒரே உலகம், உலக ஒழுக்கவியலில் திருவள்ளுவர்.**

⭐ Additional Information

முடியரசன்:

- இயற்பெயர்: **துரைராசு.**
- **பாரதிதாசனோடு** நெருக்கம் பாராட்டியவர்.
- பாரதிதாசனால் **"என் மூத்த வழித்தோன்றல்", "எனக்கு பின் கவிஞன்"** எனப் போற்றப்பட்டவர்.
- **திராவிட இயக்க** கருத்துக்களைத் தமது எழுத்துகளின் மூலம் பேசியவர்.
- இவரது கவிதைகளை சாகித்ய அகாதெமி இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.
- சில படைப்புகள்: **காவியப் பாவை, வீரகாவியம், மனிதனை தேடுகின்றேன், ஞாயிறும் திங்களும், எக்கோவின் காதல், ஊன்றுகோல்.**

பாரதியார்:

- ஊர்: எட்டயபுரம்.
- காலம்: 1882 - 1921.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- கவிஞர், கட்டுரையாளர்.
- இந்தியா, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- சில படைப்புகள்: பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி, சின்னஞ்சிறு கிளியே, சந்திரிகையின் கதை, விநாயகர் நான்மணிமாலை.

பாவேந்தர் பாரதிதாசன்:

- இயற்பெயர்: கனக சுப்புரத்தினம்.
- பாரதியார் மீதான பற்றுதல் காரணமாகத் தனது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- சிறப்புப் பெயர்கள்: பாவேந்தர், புரட்சிக்கவிஞர்.
- சில படைப்புகள்: அம்மைச்சி (நாடகம்), உயிரின் இயற்கை, நீலவண்ணன் புறப்பாடு, விடுதலை வேட்கை, ரஸ்புடீன் (நாடகம்).

---

12. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.**

★ Key Points

- வரிகள்: "**வெற்றிமேல் வெற்றிவர விருதுவர பெருமைவர**
  **மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேண்டும்**
  **பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்**
  **வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்**".
- மேற்கண்ட வரிகளை இயற்றியவர் - **பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.**

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்:

- **தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர்.**
- சிறப்பு பெயர்: **மக்கள் கவிஞர்**
- **பொதுவுடைமை** கருத்துகள் மீது பற்றுக் கொண்டவர்.
- பல திரைப்படங்களில் பாடலாசிரியராக பணியாற்றியவர்.

★ Additional Information

வாணிதாசன்:

- இயற்பெயர்: **அரங்கசாமி (எ) எத்திராசலு**
- இவர் பாரதிதாசனை பின்பற்றி எழுந்த **பாரதிதாசன் பரம்பரையைச்** சார்ந்தவர்.
- சாகித்ய அகாதெமி வெளியிட்ட **தமிழ் கவிதைக் களஞ்சியம்** எனும் நூலில் இவருடைய பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- வாணிதாசனுக்கு பிரெஞ்சு அரசு **செவாலியர்** விருது வழங்கியது.
- சில படைப்புகள்: **இரவு வரவில்லை, இன்ப இலக்கியம், இனிக்கும் பாட்டு, எழிலோவியம், தொடுவானம், பொங்கற்பரிசு, பாட்டு பிறக்குமடா.**

பாவேந்தர் பாரதிதாசன்:

- இயற்பெயர்: கனக சுப்புரத்தினம்
- பாரதியார் மீதான பற்றுதல் காரணமாக தனது பெயரை பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- சிறப்புப் பெயர்கள்: பாவேந்தர், புரட்சிக்கவிஞர்.
- சில படைப்புகள்: அம்மைச்சி (நாடகம்), உயிரின் இயற்கை, நீலவண்ணன் புறப்பாடு, விடுதலை வேட்கை, ரஸ்புடீன் (நாடகம்).

கண்ணதாசன்:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- இயற்பெயர்: முத்தையா
- சிறப்புப் பெயர்: கவியரசு
- தமிழக அரசின் அரசவைக்கு கவிஞராக இருந்தவர்.
- பல திரையிசைப் பாடல்களை எழுதியுள்ளார்.
- சில படைப்புகள்: அர்த்தமுள்ள இந்து மதம், மனவாசம், வனவாசம், சேரமான் காதலி.

---

13. **Answer: b**

**Explanation:**

சரியான விடை (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

★ Key Points

**தாவர இலைப் பெயர்கள்**

- **அகத்தி,பசலை, முருங்கை - கீரை**
- **அருகு, கோரை - புல்**
- **நெல், வரகு - தாள்**
- **சப்பாத்திக்கள்ளி, தாழை - மடல்**

★ Additional Information

- ஆல், அரசு, மா, பலா, வாழை - இலை
- மல்லி - தழை
- கரும்பு, நாணல் - தோகை
- பனை, தென்னை - ஓலை
- கமுகு - கூந்தல்

---

14. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **பெரியார்**.

★ Key Points

- குடும்ப நலத்திட்டம், கலப்புத் திருமணம் போன்றவற்றிற்கு வித்திட்டவர் - **பெரியார்**.

பெரியார்:

- இயற்பெயர்: ஈ . வெ . ராமசாமி.
- காலம்: **1879-1973**.
- ஊர்: **ஈரோடு**.
- இயக்கம்: சுயமரியாதைஇயக்கம் (1925).
- இதழ்கள்: குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் ( ஆங்கிலஇதழ் ).
- யுனெஸ்கோ நிறுவனம் பெரியாருக்கு ' தெற்குஆசியாவின்சாக்ரடீஸ் ' என 27-06-1970 அன்று பட்டம் வழங்கியது.

★ Additional Information

**பால கங்காதர திலகர்:**

- **தேசியவாதி, விடுதலை போராட்ட வீரர்.**

Prepp Your Personal Exams Guide

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- பட்டம்: **லோகமான்ய.**
- "**தன்னாட்சி எனது பிறப்புரிமை அதனை நான் பெறுவேன்**" என்பது இவருடைய புகழ்பெற்ற முழக்கம்.
- இதழ்கள்: **கேசரி (மராட்டிய இதழ்), மராட்டா (ஆங்கில இதழ்).**
- வங்கப் பிரிவினையை எதிர்த்து எழுந்த **சுதேசி இயக்கத்தில்** தீவிரமாக செயலாற்றியவர்.
- **அன்னி பெசன்ட்** அம்மையாருடன் இணைந்து திலகர் **HOME RULE** (ஹோம் ரூல்) இயக்கத்தைத் தொடங்கினார்.
- 1908 - 1914 காலகட்டத்தில் **பர்மா சிறையில்** வாடினார்.

வ. உ. சி:

- **வழக்கறிஞர், சுதந்திர போராட்ட வீரர்.**
- ஆங்கிலேயரை எதிர்த்து **சுதேசி கப்பல் கம்பனியை** உருவாக்கியவர்.
- **பால கங்காதர திலகரை** பின்பற்றி தீவிரமாக சுதந்திர போராட்டத்தில் செயலாற்றியவர்.
- "**தென்னாட்டு திலகர்**" என போற்றப்பட்டவர்.
- தேச துரோக குற்றம் சுமத்தி ஆங்கில அரசு இவருக்கு **சிறை தண்டனை** விதித்தது.
- சில படைப்புகள்: **மனம் போல் வாழ்வு, மெய்யறிவு, மெய்யறம்.**

அண்ணல் அம்பேத்கர்:

- பிறப்பு: **14-04-1891.**
- இயற்பெயர்: **பீமாராவ்.**
- தந்தை: **இராம்ஜி சக்பால்.**
- தாய்: **பீமாபாய்.**
- **1915**ஆம் ஆண்டு **அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில்** முதுகலைப் பட்டம் பெற்றார்.
- லண்டன் சென்று **முனைவர்** பட்டமும், **பாரிஸ்டர்** பட்டமும் பெற்றார்.
- **1927**ஆம் ஆண்டு **மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை** முன்னெடுத்தார்.
- **வட்டமேசை மாநாட்டில்** கலந்துக் கொண்டு ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காக பேசினார்.
- இந்தியாவின் **அரசியலமைப்பை உருவாக்கும் குழுவின் தலைவராக** செயல்பட்டார்.
- சுதந்திர இந்தியாவில் நேருவின் அமைச்சரவையில் **சட்ட அமைச்சராக** பொறுப்பேற்றார்.
- **1946**ஆம் ஆண்டில் **மக்கள் கல்விக் கழகத்தைத்** தோற்றுவித்தார்.
- **சித்தார்த்தா உயர்கல்வி நிலையம்** அவருடைய முயற்சியில் உருவானது.
- இவர் எழுதிய "**இந்தியாவின் தேசிய பங்குவீதம்**" எனும் நூல் மிகவும் புகழ்பெற்றது.
- **1990**ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு "**பாரத ரத்னா**" விருது வழங்கியது.

---

15. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: வனைதல்

★ Key Points

- பானை வனைதல் ஒரு சிறந்த கலையாகும்.
- இதில் பானை வனைதல் என்பது மரபுச் சொல் ஆகும்.

மரபு சொற்கள்:

★ Additional Information

- கூடை முடைந்தான்
- ஆடை நெய்தான்
- பால் பருகினான்
- தண்ணீர் குடித்தான்

---

Prepp Download Prepp APP GET IT ON Google Play

16. **Answer: a**

**Explanation:**

சரியான விடை:
முத்துக்குமார சாமி பிள்ளைத்தமிழ்.

⭐

Key Points
பிள்ளைத்தமிழ்:

- 96வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும்.
- இறைவன் அல்லது தலைவன் அல்லது அரசனையோ பாட்டுடைத் தலைவனாக்கி பிள்ளையாக கருதிப் பாடப்படுவதே பிள்ளைத்தமிழ்.
- பருவம்: 10 (பருவத்திற்குப் பத்துப்பாடல்கள் என நூறு பாடல்கள்).
- வகை: ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ்.
- இருபாலருக்குமான பொதுவான முதல் 7 பருவங்கள்:

1. காப்பு
2. செங்கீரை
3. தால்
4. சப்பாணி
5. முத்தம்
6. வருகை
7. அம்புலி.

- ஆண்பாலிற்கான கடைசி 3 பருவங்கள்:

8. சிற்றில்
9. சிறுபறை
10. சிறுதேர்.

- பெண்பாலிற்கான கடைசி 3 பருவங்கள்:

8. கழங்கு
9. அம்மானை
10. ஊசல்.

முத்துக்குமார சாமி பிள்ளைத்தமிழ்:

- **96வகை சிற்றிலக்கியங்களில்** ஒன்றாகும்.
- இயற்றியவர்: **குமரகுருபரர்.**
- பாட்டுடைத்தலைவன்: **முருகன்.**
- காலம்: **17ஆம் நூற்றாண்டு.**
- பாடல்கள்: **101.**

குமரகுருபரர்:

- ஊர்: **திருவைகுண்டம்.**
- தந்தை: **சண்முகசிகாமணிக் கவிராயர்.**
- தாய்: **சிவாகம சுந்தரி.**
- காலம்: **17ஆம் நூற்றாண்டு.**
- மொழிப்புலமை : **தமிழ், வடமொழி, இந்துஸ்தானி.**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- படைப்புகள்: **கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலா வல்லிமாலை, நீதிநெறி விளக்கம், காசிக் கலம்பகம், திருவாரூர் மும்மணிக்கோவை.**

⭐ Additional Information

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்:

- இயற்றியவர்: **திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.**
- பாட்டுடைத்தலைவன்: **சேக்கிழார்.**
- காலம்: **19ஆம் நூற்றாண்டு.**

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்:

- இயற்றியவர்: **ஒட்டக்கூத்தர்.**
- பாட்டுடைத்தலைவன்: **இரண்டாம் குலோத்துங்கன்.**
- காலம்: **12ஆம் நூற்றாண்டு.**

---

17. **Answer: b**

### Explanation:

சரியான விடை: **பரணி.**

⭐ Key Points

பரணி:

- **96வகை சிற்றிலக்கியங்களில்** ஒன்றாகும்.
- போரிலே ஆயிரம் யானைகளை கொன்ற வெற்றி வீரனை பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்படும் இலக்கியமே பரணி.
- பரணி இலக்கிய மரபின்படி **தோற்கடிக்கப்பட்ட நாட்டின் பெயரே நூலின் பெயராக** அமையும்.
- **கலிங்கத்துப்பரணி, தக்கயாகப் பரணி** போன்றவை நன்கு அறியப்பட்ட பரணி இலக்கிய நூல்களாகும்.

⭐ Additional Information

கலம்பகம்:

- பல செய்யுட்களால் பல வித பொருள்களை கூறும் சிற்றிலக்கிய வகையே கலம்பகம் ஆகும்.
- தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் - **நந்திக் கலம்பகம்.**

அந்தாதி:

- அந்தம் - **முடிவு.**
- ஆதி - **தொடக்கம்.**
- ஒரு பாடலின் முடிவில் உள்ள எழுத்து, அசை, சீர் அல்லது அடி அடுத்து வரும் பாடலின் தொடக்கமாக வரும் பாடல்களை கொண்டதே அந்தாதி செய்யுள்.

பரிபாடல்:

- **பரிபாட்டு** எனவும் அழைப்பர்.
- பரிபாடலானது **பாட்டு வகைகளுள்** ஒன்றாகும்.
- பரிபாடல் எனும் சொல்லின் பொருள் **ஏற்றுக்கொண்டு வருதல்** என்பதாகும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றை ஏற்று வருதல்.
- இதுபோன்ற பாடல்களை கொண்ட தொகைநூலும் "பரிபாடல்" என்றே வழங்கப்படுகின்றது.
- பரிபாடல் ஒரு **பண்ணிசை இலக்கியம்.**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

18. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **கூற்று 1, 2 சரி தப்பு ஆட்டம்**

⭐ Key Points

- தப்பு எனும் தோற்கருவியை இசைத்துக் கொண்டே அதன் இசைக்கேற்ப ஆடுவதே **தப்பாட்டம்.**
- **தப்பு** - வட்ட வடிவத்தில் உள்ள அகன்ற தோற்கருவி.
- **தப்பட்டை, தப்பு** எனவும் தப்பு ஆட்டம் அழைக்கப்படுகிறது.
- **கோவில் திருவிழா, திருமணம், விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி, இறப்பு** போன்றவற்றில் தப்பு ஆட்டம் இசைக்கப்படுகிறது.
- "**தப் தப்**" என ஒலிப்பதால் தப்பு ஆட்டம் எனப் பெயர் பெற்றது.
- "**பறை**" என்றும் அழைக்கப்படுகிறது.
- "**தகக தகதகக தந்தத்த தந்தத்த என்ற தாளம் பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக" - அருணகிரிநாதரால் திருப்புகழில் எழுதப்பட்ட வரிகள்.**
- பறையானது **தொல்காப்பியத்தில் கூறப்படும் கருப்பொருள்களில் ஒன்றாகும்.**
- சூழலுக்கேற்ப தப்பாட்டம் வேறுபடுகின்றது.
- முதலில் ஆண்கள் மட்டுமே ஆடிவந்த நிலையில் தற்போது பெண்களும் ஆடுகின்றனர்.

⭐ Additional Information

நிகழ்கலைகள்:

- கரகாட்டம்
- மயிலாட்டம்
- காவடியாட்டம்
- ஒயிலாட்டம்
- தேவராட்டம், சேர்வையாட்டம்
- பொய்க்கால் குதிரையாட்டம்
- தப்பு ஆட்டம்
- புலி ஆட்டம்
- தெரு கூத்து
- தோற்பாவைக் கூத்து.

Prepp Your Personal Exams Guide

19. **Answer: c**

**Explanation:**

⭐

சரியான விடை: **நாட்டுப்புறப் பாடல் Key Pointsநாட்டுப்புறப் பாடல்**

- உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே - நாட்டுப்புறப் பாடல்.
- நாட்டுப்புறப்பாடல்கள் காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்படுவதால் **வாய்மொழி இலக்கியம்** எனவும் அழைப்பர்.
- **தொழிற்பாடல்கள் (ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு), விளையாட்டுப்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள்** போன்றவையும் நாட்டுப்புறப்பாடல்களே ஆகும்.

⭐

Prepp Download Prepp APP GET IT ON Google Play

Additional Informationவிளையாட்டுப் பாடல்:

- **சிறுவர்கள் விளையாடும் போது** பாடப்படும் பாடல்களே விளையாட்டுப் பாடல்.

தாலாட்டுப் பாடல்:

- **குழந்தையை தூங்கவைக்கவும், அழுகையை நிறுத்தவும்** பாடப்படுவதே தாலாட்டுப் பாடல்.

கும்மிப் பாடல்:

- **மகளிர் கைகொட்டி விளையாடும் பொழுது பாடுவதே** கும்மிப் பாடல்.
- கும்மிப் பாடல் **வெண்பா** இனத்தைச் சார்ந்தது.
- **வகைகள்**:
    - இயற்கும்மி
    - ஒயிற்கும்மி
    - ஓரடிக்கும்மி.

---

20. **Answer: b**

**Explanation:**

சரியான விடை: **வாய்மொழி இலக்கியம்**

⭐ Key Points

வாய்மொழி இலக்கியம்:

- ஏட்டில் எழுதப்படாமல் வழி வழியாக சொல்லப்பட்ட கதைகளையும் பாடல்களையும் கொண்டு இயற்றப்படுவதே வாய்மொழி இலக்கியம்.
- புராணக் கதைகள், தாலாட்டுப் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், கும்மிப் பாடல்கள் போன்றவை வாய்மொழி இலக்கிய வகையைச் சார்ந்தவை.

⭐ Additional Information

நாட்டுப்புறப் பாடல்:

- உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே - நாட்டுப்புறப் பாடல்.
- நாட்டுப்புறப்பாடல்கள் காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்படுவதால் வாய்மொழி இலக்கியம் என்வும் அழைப்பர்.
- தொழிற்பாடல்கள் (ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு), விளையாட்டுப்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள் போன்றவையும் நாட்டுப்புறப்பாடல்களே ஆகும்.

**அற இலக்கியம்**:

- அறக்கருத்துக்களை முன்வைத்து சமுதாயம் நல்லவழியில் நடக்க உதவுவதே **அற இலக்கியங்கள்**.
- அவ்வாறு அறக்கருத்துக்களை பேசும் நூல்களின் தொகுப்பே **பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்**.

**சங்க இலக்கியம்**:

- **கி.மு. 500** முதல் **கி.பி. 200** வரை உள்ள காலகட்டத்தில் இயற்றப்பட்ட செவ்வியல் இலக்கியங்களே சங்க இலக்கியங்கள் என்பதாகும்.
- அக்கால தமிழர்களின் **வாழ்வு**, **காதல்**, **போர்**, **ஆட்சி**, **வணிகம்**, **நட்பு** ஆகியவற்றைப்பற்றி சங்க இலக்கிய நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

பதினெண் மேற்கணக்கு நூல்கள்:

- எட்டுத்தொகை:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

    - அகம்: நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, அகநானூறு.
    - புறம்: புறநானூறு, பதிற்றுப்பத்து.
    - அகமும் புறமும்: பரிபாடல்.
- பத்துப்பாட்டு:
    - அகம்: குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை.
    - புறம்: மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்:

- நாலடியார்
- இன்னா நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திருக்குறள்
- ஆசாரக்கோவை
- சிறுபஞ்சமூலம்
- ஏலாதி
- நான்மணிக்கடிகை
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- திணை மொழி ஐம்பது
- திணை மாலை நூற்றைம்பது
- திரிகடுகம்
- பழமொழி நானூறு
- முதுமொழிக்காஞ்சி
- கைந்நிலை.

---

21. **Answer: c**

**Explanation:**

Prepp Your Personal Exams Guide

சரியான விடை: (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii).

Key Points

- பாய்களில் பல வகைகள் உள்ளன.
    - **தடுக்குப்பாய்** - குழந்தைகளை படுக்கவைப்பதற்கு.
    - **பந்திப்பாய்** - உட்கார்ந்து உணவு உண்ணுவதற்கு.
    - **திணைப்பாய்** - உட்காரவும், படுப்பதற்கும்.
    - **பட்டுப்பாய்** - திருமணத்தில் பயன்படுத்தப்படுவது.
    - **தொழுகைப்பாய்** - இஸ்லாமியர்களின் தொழுகையில் பயன்படுவது.
- பாய்மரக் கப்பல்களில் பயன்படுத்தப்படுவதும் பாய்களே.இதனை " **கூம்பொடு மீப்பாய் களையாது**" எனப் **புறநானூறு** குறிப்பிடுகிறது.

Additional Information

நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்:

- மண்பாண்டம்
- சுடுமண் சிற்பங்கள்
- மூங்கில்கலை

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- கோரைப்பாய் பொருட்கள்
- பனையோலை பொருட்கள்
- பிரம்புக்கலை

---

22. **Answer: b**

**Explanation:**

சரியான விடை: **நெல்.**

⭐ Key Points

- அக்கால வணிகத்தில் விலை நெல்லைக் கொண்டு கணக்கிடப்பட்டது.
- அக்காலத்தில் **நெல் மற்றும் உப்பு** ஆகிய இரண்டும் ஒரே மதிப்புடையதாக கருதப்பட்டது.
- '**நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**

**கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்**' - எனும் அகநானூற்று பாடலின் மூலம் மேலே சொல்லப்பட்ட கருத்து புலப்படுகிறது.

⭐ Additional Information

**பழங்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்:**

- பொன்
- மென்மைமிக்க புடவைகள்
- சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள்
- பவளம்
- செம்பு
- கோதுமை.

**பழங்காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்:**

- மிளகு
- முத்து
- யானைத் தந்தங்கள்
- பட்டு
- மணி.

---

23. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **வாடைக் காற்று.**

⭐ Key Points

வாடைக் காற்று:

- **வடக்கு** என்பதற்கு **வாடை** என மற்றொரு பெயர் உள்ளது.
- வடக்கிலிருந்து வீசுவதால் வாடைக்காற்று என பெயர் பெற்றது.
- பனிப்பிரதேசங்களில் இருந்து வீசுவதால் இது **குளிர்ச்சியான காற்றாக** உள்ளது.
- குளிர்ச்சியான காற்று என்பதால் இதனை **ஊதைக் காற்று** எனவும் அழைக்கப்படுகிறது.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

⭐ Additional Information

தென்றல் காற்று:

- **தெற்கிலிருந்து** வீசுவதால் **தென்றல்** எனப் பெயர் பெற்றது.
- தென்றல், மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு ஆகியவற்றை தாண்டி வருகின்றது.
- பல தடைகளை தாண்டி வருவதால் வேகம் குறைந்து **இதமான காற்றாக** வீசுகிறது.

கொண்டல்:

- **கிழக்கு** என்பதற்குக் **குணக்கு** என மற்றொரு பெயர் உள்ளது.
- கிழக்கிலிருந்து வீசுவதால் **கொண்டல்** என பெயர் பெற்றது.
- **குளிர்ச்சி** தரக்கூடியது கொண்டல்.
- மழை மேகங்களைச் சுமந்து வருவதால் இதனை **மழைக்காற்று** எனவும் அழைக்கப்படுகிறது.

கோடை:

- **மேற்கு** என்பதற்குக் **குடக்கு** என மற்றொரு பெயர் உள்ளது.
- மேற்கிலிருந்து வீசுவதால் **கோடை** என பெயர் பெற்றது.
- அதிக வலிமையோடு வீசக்கூடியக் காற்று.
- வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் **வெப்பக்காற்று** எனவும் அழைக்கப்படுகிறது.

---

24. **Answer: a**

**Explanation:**

சரியான விடை: **செங்கல்பட்டு மாவட்டம்**.

⭐ Key Points

மாமல்லபுரம்:

- பெயர் காரணம்: **மாமல்லன்** என்று அழைக்கப்படக்கூடிய **நரசிம்மவர்மனின்** பெயரை கொண்டிருப்பதால் **மாமல்லபுரம் என பெயர் பெற்றது.**
- **மாமல்லபுரத்தில் உள்ள முக்கிய இடங்கள்:**
  - அர்ச்சுனன் தபசு
  - கடற்கரைக் கோவில்
  - பஞ்சபாண்டவர் ரதம்
  - ஒற்றைக்கல் யானை
  - குகைக்கோவில்
  - புலிக் குகை
  - திருக்கடல் மல்லை
  - கிருஷ்ணரின் வெண்ணெய்ப் பந்து
  - கலங்கரை விளக்கம்.

⭐ Additional Information

- **சிற்பக் கலையின் வகைகள்:**
  - குடைவரைக் கோவில்கள்
  - ஒற்றைக்கல் கோவில்கள்
  - கட்டுமானக் கோவில்கள்
  - புடைப்புச் சிற்பங்கள்
- இவை நான்கும் காணக்கூடிய ஒரே இடம் மாமல்லபுரம்.

---

Prepp Download Prepp APP GET IT ON Google Play

25. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **குடநாடு**.

⭐ Key Points

- சேரர்களின் நாடு **குடநாடு** என அழைக்கப்பட்டது.
- சேரர்களின் தலைநகராக விளங்கியது **வஞ்சி**.
- **வஞ்சி** நகரானது **கருவூர்** எனவும் அழைக்கப்பட்டது.
- சேர நாட்டின் துறைமுகங்கள் - **தோண்டி, முசிறி, காந்தளூர்**.
- கொடி - **விற்கொடி**
- பூ - **பனம்பூ**
- சேர நாடு என்பது இன்றைய **கேரளத்தையும் கோவை மற்றும் சேலம் மாவட்டங்களின் சில பகுதிகளையும்** உள்ளடக்கியதாக இருந்தது.

⭐ Additional Information

- **மூவேந்தர்கள்**:
  - சேரர்
  - சோழர்
  - பாண்டியர்.
- மூவேந்தர்களில் **சேரர்களே மூத்தவர்** எனக் கருதப்படுகிறது.
- "**போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்**" எனும் **தொல்காப்பிய வரிகள்** மேல கூறப்படும் கருத்துக்கு வலுசேர்கின்றன.
- சிலப்பதிகாரத்தை இயற்றிய **இளங்கோவடிக**ள் சேரமரபைச் சார்ந்தவரே ஆவார்.
- பத்து சேர மன்னர்கள் சிறப்பைக் கூறும் நூல் **பதிற்றுப்பத்து**.

---

26. **Answer: b**

**Explanation:**

Your Personal Exams Guide

சரியான விடை: **பரிபாடல்**.

⭐ Key Points

பரிபாடல்:

- **எட்டுத்தொகை** நூல்களில் ஒன்றாகும்.
- சிறப்பு பெயர்: **ஓங்கு பரிபாடல்**.
- பரிபாடல் **பண்ணோடு பாடப்பட்ட** சங்க நூலாகும்.
- இந்நூலில் மொத்தம் **70 பாடல்கள்** உள்ளன. அனால் தற்பொழுது **24 பாடல்களே** கிடைத்துள்ளன.
- **1918**ஆம் ஆண்டு முதன்முதலில் பரிபாடலை பதிப்பித்தவர் **உ.வே.சா** ஆவார்.

⭐

Additional Information புறநானூறு:

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
- பாடல்கள்: 400 (புறத்திணை சார்ந்த நானூறு).
- பிற பெயர்கள்: புறம், புறப்பாட்டு.
- புறநானூறு அகவற்பாக்களால் ஆனது.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- உ.வே.சா வின் முயற்சியால் 1894ஆம் ஆண்டு அச்சிலேறியது.
- ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- The Four Hundred songs of war and wisdom: An Anthology of poems from classical Tamil, the purananuru எனும் பெயரில் 1999ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியர் ஜார்ஜ். எல். ஹார்ட் (கலிபோர்னியா பல்கலைக்கழகம்) என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- Extracts from purananooru & purapporul venbamolai என்ற பெயரில் புறநானூற்றின் சில பாடல்களை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- வானவியல், இயற்பியல் செய்திகள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

நற்றிணை:

- தொகுப்பு: எட்டுத்தொகை.
- தனிப் பாடல்களாகப் பலராலும் இயற்றப்பெற்று பின்னர் தொகுக்கப்பட்டது.
- பாடல்கள்: 400 அகவற்பாக்களை கொண்ட நூல்.
- குருஞ்சித்திணை - 132.
- பாலைத்திணை - 104.
- நெய்தல் திணை - 102.
- மருதத் திணை - 32.
- முல்லைத் திணை - 30.
- நற்றிணையை முதன்முதலில் பதிப்பித்தவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஆவார்.
- இந்நூல் ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டடிப் பெருமையும் கொண்டது.
- அகப்பொருள் பற்றிய நூல் என்றாலும் புறப்பொருள் செய்திகள் மற்றும் வரலாற்று குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.
- இந்நூலின் கடவுள் வாழ்த்து பாடல்களை பாடியவர் பாரதம் பாடிய பெரும்தேவனார்.
- இந்நூலை தொகுப்பித்தவர் - பன்னாடு தந்த மாறன் வழுதி (பாண்டிய மன்னன்).

அகநானூறு:

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- பிரிவுகள்: களிற்றியனை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை.
- பாடல்கள்: 400 (களிற்றியனை நிறை - 120, மணிமிடைப் பவளம் - 180, நித்திலக்கோவை - 100).
- சிறப்புப் பெயர்கள்: நெடுந்தொகை நானூறு.
- இந்நூலில் பாடல் எண்ணிற்க் கேற்ப திணைகள் தொகுக்கப்பட்டுள்ளது.

| திணை | பாடல்கள் | வரிசை |
|---|---|---|
| நெய்தல் | 40 | 10, 20, 30, 40.... |
| முல்லை | 40 | 4, 14, 24, 34.... |
| மருதம் | 40 | 6, 16, 26, 36.... |
| குறுஞ்சி | 80 | 2, 8, 12, 18.... |
| பாலை | 200 | 1, 3, 5, 7.... |

27. **Answer: c**

### Explanation:

சரியான விடை: அகநானூறு.

⭐ Key Points

- நெடுந்தொகை என அழைக்கப்படும் நூல் - அகநானூறு.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

அகநானூறு:

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- பிரிவுகள்: களிற்றியனை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை.
- பாடல்கள்: 400 (களிற்றியனை நிறை - 120, மணிமிடைப் பவளம் - 180, நித்திலக்கோவை - 100).
- சிறப்புப் பெயர்கள்: நெடுந்தொகை நானூறு.
- இந்நூலில் பாடல் எண்ணிற்க் கேற்ப திணைகள் தொகுக்கப்பட்டுள்ளது.

| திணை | பாடல்கள் | வரிசை |
|---|---|---|
| நெய்தல் | 40 | 10, 20, 30, 40.... |
| முல்லை | 40 | 4, 14, 24, 34.... |
| மருதம் | 40 | 6, 16, 26, 36.... |
| குறுஞ்சி | 80 | 2, 8, 12, 18.... |
| பாலை | 200 | 1, 3, 5, 7.... |

★ Additional Information

புறநானூறு:

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
- பாடல்கள்: 400 (புறத்திணை சார்ந்த நானூறு).
- பிற பெயர்கள்: புறம், புறப்பாட்டு.
- புறநானூறு அகவற்பாக்களால் ஆனது.
- உ.வே.சா வின் முயற்சியால் 1894ஆம் ஆண்டு அச்சிலேறியது.
- ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- **எதுகை**: ஒரு பாடல்/செய்யுளின் சீர்களிலோ, அடிகளிலோ >இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.
- **மோனை**: ஒரு பாடல்/செய்யுளின் சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.
- **இயைபு**: ஒரு பாடல்/செய்யுளின் சீர்களிலோ, அடிகளிலோ அடியிறுதியில் ஓரெழுத்தோ, பல எழுத்துகளோ ஒன்றிவருவது இயைபு எனப்படும்.
- **எ. கா. முகிலே பொழிலே**
- **முரண்**: அடிதோறும் சொல்லாலும் பொருளாலும் முரண்படுமாறு தொடுப்பது முரண் தொடையாகும்.
- **எ.கா. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

64. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

⭐ Key Points

- வெண்பா - செப்பல் ஓசை
- ஆசிரியப்பா - அகவல் ஓசை
- கலிப்பா - துள்ளல் ஓசை
- வஞ்சிப்பா - தூங்கல் ஓசை

ஆசிரியப்பா:

⭐ Additional Information

- ஒவ்வோரடியும் நான்கு ஈரசைச் சீர்களால் அமைந்து இடையில் காய்ச்சீராகிய மூவசைச் சீர்களைப் பெற்றுவந்தால் அது ஆசிரியப்பா ஆகும்.
- அகவலோசையை உடைய பாவகை ஆசிரியப்பா ஆகும்.
- ஆசிரியப்பா வகைகள்:
  - நேரிசை ஆசிரியப்பா,
  - இணைக்குறள் ஆசிரியப்பா,
  - நிலைமண்டில ஆசிரியப்பா.

வெண்பா:

- ஒரு பாடல் இரண்டடி முதல் 12 அடி வரை வந்து அனைத்து அடிகளும் நாற்சீர் கொண்டு இறுதி அடியில் மட்டும் மூன்று சீர் அமைந்திருந்தால் இது வெண்பா எனப்படும்.

கலிப்பா:

- கலிப்பா துள்ளலோசையை அடிப்படையாகக் கொண்டது.
- கலிப்பா ஒவ்வொரு அடிக்கும் நான்கு சீர்களைக் கொண்டிருக்கும்.

வஞ்சிப்பா:

- வஞ்சிப்பா தூங்கல் ஓசையை அடிப்படையாகக் கொண்டது.
- வஞ்சிப்பா குறைந்த அளவாக மூன்று அடிகளைக் கொண்டிருக்கும்.

Prepp Your Personal Exams Guide

---

65. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: **ஆசிரியப்பா**

⭐ Key Points

- அகவல் ஓசை **ஆசிரியப்பாவுக்கு** உரியது.
- ஆசிரியப்பாவின் வேறு பெயர்: **அகவற்பா**
- **இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும், கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும்** இருப்பது **அகவற்பா** என்னும் **ஆசிரியப்பா** ஆகும்.
- சங்க இலக்கியங்களும் **சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை** ஆகிய காப்பியங்கள் **அகவற்பாவில்** அமைந்துள்ளன.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- **நான்கு சீர்களைப்** பெற்று வரும்.
- ஆசிரியப்பாவின் இறுதிச்சீர் **ஏ, ஓ, என், ஆய், ஐ** என்னும் அசைகளுள் ஒன்றினை ஈற்றில் பெற்று முடி யும்.
- **வகைகள்:**
  - நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா

★ Additional Information

வஞ்சிப்பா:

- வஞ்சிப்பாவில் **ஓர் அடியில் இரண்டு அல்லது மூன்று சீர்களே** இடம் பெறும்.
- வஞ்சிப்பா **மூன்றடிச் சிற்றெல்லை** உடையது. பேரல்லைக்கு வரையறை இல்லை.
- **தூங்கல் ஓசை** வஞ்சிப்பாவுக்கு உரியது.
- **வகைகள்:**
  - குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா

கலிப்பா:

- நான்கு சீர்களைப் பெற்று வரும்.
- **துள்ளல் ஓசை**கலிப்பாவிற்கு உரியது.
- மூவசைச் சீர்களில் **காய்ச்சீரே** கலிப்பாவிற்கு உரியது.

வெண்பா:

- **ஈற்றடி முச்சீராய்** ஏனைய அடிகள் **நாற்சீராய்** வரும்.
- **இரண்டடி சிற்றெல்லையும், பன்னிரண்டு அடிவரை பேரல்லை யும்** பெற்று வரும்.
- அறம் கூறும் **குறளும், நாலடியாரும்** வெண்பாவில் அமைந்துள்ளன.
- **செப்பலோசை** வெண்பாவிற்குரியது.
- **வகைகள்:**
  - குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா

---

66. **Answer: c**

**Explanation:**

சரியான விடை: **தொகுதி**.

★ Key Points

- துருபிடிக்கும் என்ற காரணத்திற்காக இரும்பு ஆணிகளை தவிர்த்து மரத்தினால் செய்யப்பட்ட ஆணிகள் பயன்படுத்தப்பட்டன. அவை தொகுதி என அழைக்கப்பட்டது.
- மரங்களையும் பலகைகளை இணைக்க அவற்றுக்கு இடையே தேங்காய் நார், பஞ்சு ஆகியவற்றை பயன்படுத்தினர்.
- சுண்ணாம்பையும் சணலையும் அரைத்து அதனோடு எண்ணெய் கலந்து கப்பலின் அடிபகுகுதியில் பூசினர்.
- இதனால் கப்பல்கள் நீண்ட ஆயுட்காலம் கொண்டிருந்தனர்.

★ Additional Information

- தமிழர்கள் சிறிய நீர் நிலைகளை கடக்க தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் ஆகியவற்றை பயன்படுத்தினர்.
- தமிழர்கள் கடல் பயணம் மேற்கொள்ள கலம், வங்கம், நாவாய் ஆகியவற்றை பயன்படுத்தினர்.

கப்பல்:

- "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய்" - மணிமேகலையில் இடம்பெற்றுள்ள வரிகள். இவ்வரியில் கம்மியர் எனும் சொல் கப்பல் கட்டும் கலைஞர்களை குறிக்கின்றன.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- கப்பலின் நீர்மட்ட பகுதியை உருவாக்குவதற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் ஆகிய மரங்கள் பயன்படுத்தப்பட்டன.
- கப்பலின் பக்கவாட்டு பகுதியை உருவாக்குவதற்கு தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்கள் பயன்படுத்தப்பட்டன.
- கண்ணடை - இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள்.
- வெட்டுவாய் - மரத்தின் வெட்டப்பட்ட பகுதி.
- சூழி உள்ள மரங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது.
- நீளம், அகலம், உயரம் ஆகியவற்றை கணக்கிட தச்சுமுழம் எனும் நீட்டளவை பயன்பட்டது.
- கப்பலின் முன்பகுதியை யானை, குதிரை, அன்னம் ஆகிய வடிவங்களை கொண்டு உருவாக்கினர். அவற்றை கரிமுக அம்பி (யானை முகம்), பரிமுக அம்பி (குதிரை முகம்) என அழைத்தனர்.
- கப்பலின் உறுப்புகள் - ஏரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம்.
- ஏரா - கப்பலின் அடிமரம்.
- பருமல் - கப்பலின் குறுக்கு மரம்.
- சுக்கான் - கப்பலை செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும்.
- சமுக்கு - காந்த ஊசி கொண்ட திசை காட்டும் கருவி என கருதப்படுகிறது.
- நங்கூரம் - கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்துவது.
- கப்பலை செலுத்துபவர்கள் - மாலுமி, மீகாமன், கப்பலோட்டி, நீகான்.
- தமிழர்கள் காற்று வீசும் திசை மற்றும் கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றை அனுபவத்தால் அறிந்திருந்தனர். அந்த அறிவைக் கொண்டு கப்பல்களை செலுத்தினர்.
- திசைகளை அறிய திசை காட்டும் கருவிகள் மட்டும் வானில் தோன்றும் விண்மீன்களை பயன்படுத்தினர்.

<u>பாய்மரக் கப்பல்:</u>

- காற்றின் உதவியுடன் செலுத்தப்படுவது பாய்மரக்கப்பல்கள்.
- வகைகள் - பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம்.
- பாய்மரம் கட்டும் கயிறுகள் - ஆஞ்சான் கயிறு, தாம்பாங்கயிறு, வேடாங்கயிறு, பளிங்கைக் கயிறு, மூட்டங்கயிறு, இலங்கயிறு, கோடிப்பாய்க்கயிறு.

<u>கலங்கரை விளக்கம்:</u>

- கலம் - கப்பல்.
- கரை - அழைத்தல்.
- துறைமுகம் இருக்கும் இடத்தை காட்டுவதற்கு அமைக்கப்படுவது.

---

67. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **<u>வளையத்தினை</u>**.

★ <u>Key Points</u>

- ஏறுதழுவுதலை, **மாடு பிடித்தல்**, **மாடு அணைத்தல்**, **மாடு விடுதல்**, **மஞ்சு விரட்டு**, **வேலி மஞ்சுவிரட்டு**, **எருது கட்டி**, **காளை விரட்டு**, **ஏறு விடுதல்**, **சல்லிக்கட்டு** என பல பெயர்களில் அழைப்பர்.
- **சல்லி** - மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தினைக் குறிக்கும்.
- அக்காலத்தில் சல்லி நாணயங்களை துணியால் முடிந்து மாட்டின் கொம்பில் கட்டுவர். மாட்டை தழுவும் வீரருக்கே அந்த நாணயங்கள் பரிசாகும். ஆகவே சல்லிக்கட்டு எனும் பெயர்ப்பெற்றது.
- **புளியங்கொம்பினால்** வளையம் செய்து காளையின் கழுத்தில் மாட்டிவிடும் பழக்கம் இக்காலத்தில் உள்ளது.

★ <u>Additional Information</u>

<u>ஏறுதழுவுதல்:</u>

- **கலித்தொகை**, **சிலப்பதிகாரம்**, **புறப்பொருள் வெண்பாமாலை** ஆகிய நூல்களில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- ஏறுதழுவுதல் தொடர்பான பல **நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள்** தமிழகத்தின் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன.
- **சிந்துவெளி** நாகரிகத்திலும் காளை முக்கிய பங்குவகிக்கிறது.
- சிந்துவெளி அகழாய்வில் **மாடு தழுவும் கல் முத்திரை** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருத நில மக்களின் வேளாண்மையோடும், பாலை நில மக்களின் போக்குவரத்தோடும் பிணைந்தது ஏறுதழுவுதல்.
- மேலைநாடுகளில் நடைபெறும் காளைச் சண்டைகளில் காளையை கொன்று அடக்குவதே வீரமாக கருதப்படுகிறது. ஆனால் ஏறுதழுவுதலில் காளைகள் காயப்படுத்தப்படுவதில்லை.
- அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்க்கும் விளையாட்டே ஏறுதழுவுதல்.

---

68. **Answer: a**

**Explanation:**

சரியான விடை: **கூற்று 1 சரி 2 தவறு**.

⭐ Key Points

இசைக்கருவிகளின் வகைகள்:

- **தோல் கருவிகள்** - விலங்குகளின் தோலைக் கொண்டு உருவாக்கப்படுகின்றது.
- **நரம்புக்கருவிகள்** - நரம்பு அல்லது தந்திகளைக் கொண்டவை.
- **கற்றுக்கருவிகள்** - காற்றின் மூலம் இசைக்கப்படுபவை.
- **கஞ்சக்கருவிகள்** - ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுவது.

⭐ Additional Information

1. **உடுக்கை** - தோல்கருவி
2. **குடமுழா** - தோல்கருவி
3. **திமிலை** - தோல்கருவி
4. **பறை** - மத்தளம் - தோல்கருவி
5. **முரசு** - தோல்கருவி
6. **முழவு** - தோல்கருவி
7. **குழல்** - கற்றுக்கருவி
8. **கொம்பு** - கற்றுக்கருவி
9. **சங்கு** - கற்றுக்கருவி
10. **சாலரா** - கஞ்சக்கருவி
11. **சேகண்டி** - கஞ்சக்கருவி
12. **யாழ்** - நரம்புக்கருவி
13. **வீணை** - நரம்புக்கருவி.

---

69. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **ஔவையார்**.

⭐ Key Points

- மேற்கண்ட வரிகளை இயற்றியவர் - **ஔவையார்**.

ஔவையார்:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- ஔவையார் என பெயர் கொண்ட பல பெண் புலவர்கள் இருந்துள்ளனர்.
- சங்ககால ஔவையார்:
  - சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் பாடல்களை இயற்றியுள்ளார்.
  - இவருடைய காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் ஆகும்.
- இடைக்கால ஔவையார்:
  - இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையார் அங்கவை சங்கவை திருமணத்தை நடத்தியவர்.
  - இவருடைய காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் ஆகும்.
- சோழர் காலத்தில் (கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு) வாழ்ந்த ஔவையார் நல்வழி, மூதுரை, அசதிக்கோவை, கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி ஆகியவற்றை இயற்றியவர்.
- சமய புலவராக (கி.பி. பதினான்காம் நூற்றாண்டு) வாழ்ந்த ஔவையார் ஔவை குறள், விநாயகர் அகவல் ஆகியவற்றை இயற்றியவர்.

⭐ Additional Information

காக்கைபாடினியார்:

- **சங்ககால பெண் புலவர்.**
- இயற்பெயர்: **நச்செள்ளை.**
- காக்கையை பாடியதால் இவர் **காக்கைப்பாடினியார்** என அழைக்கப்பட்டார்.
- இவர் எழுதியதாக **குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து** ஆகிய நூல்களில் **12 பாடல்கள்** கிடைத்துள்ளன.

பரணர்:

- பரணர் என பெயர் கொண்ட பல புலவர்கள் இருந்துள்ளனர்.
- சங்க காலத்தில் வாழ்ந்த பரணர் புகழ்ப் பெற்றவர்.
- இவர் எழுதியதாக **அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து** ஆகிய நூல்களில் **85 பாடல்கள்** கிடைத்துள்ளன.

கபிலர்:

- கபிலர் எனும் பெயரில் பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர்.
- **சங்க காலத்தில் வாழ்ந்த கபிலர்** முக்கியத்துவம் வாய்ந்தவர்.
- இவர் **குறுஞ்சித்திணை** பாடுவதில் வல்லவர்.
- இவர் எழுதியதாக **கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை** ஆகிய நூல்களில் பாடல்கள் கிடைத்துள்ளன.
- இவரும் **இன்னா நாற்பது** நூலை இயற்றிய கபிலரும் **ஒருவரல்லர்.**

---

**70. Answer: b**

**Explanation:**

சரியான விடை: **எருதுகட்டி.**

⭐ Key Points

- பிற்கால சிற்றிலக்கியங்களில் ஒன்றான **பள்ளு** இலக்கியத்தில் ஏறுதழுவல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **கண்ணுடையம்மன் பள்ளு** எனும் நூலில் **எருதுகட்டி** (மாடு தழுவல்) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஏறுதழுவுதலை, மாடு பிடித்தல், மாடு அணைத்தல், மாடு விடுதல், மஞ்சு விரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு என பல பெயர்களில் அழைப்பர்.
- சல்லி - மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தினைக் குறிக்கும்.
- அக்காலத்தில் சல்லி நாணயங்களை துணியால் முடிந்து மாட்டின் கொம்பில் கட்டுவர். மாட்டை தழுவும் வீரருக்கே அந்த நாணயங்கள் பரிசாகும். ஆகவே சல்லிக்கட்டு எனும் பெயர்ப்பெற்றது.
- புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் மாட்டிவிடும் பழக்கம் இக்காலத்தில் உள்ளது.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

★ Additional Information

ஏறுதழுவுதல்:

- கலித்தொகை, சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
- ஏறுதழுவுதல் தொடர்பான பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன.
- சிந்துவெளி நாகரிகத்திலும் காளை முக்கிய பங்குவகிக்கிறது.
- சிந்துவெளி அகழாய்வில் மாடு தழுவும் கல் முத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருத நில மக்களின் வேளாண்மையோடும், பாலை நில மக்களின் போக்குவரத்தோடும் பிணைந்தது ஏறுதழுவுதல்.
- மேலைநாடுகளில் நடைபெறும் காளைச் சண்டைகளில் காளையை கொன்று அடக்குவதே வீரமாக கருதப்படுகிறது. ஆனால் ஏறுதழுவுதலில் காளைகள் காயப்படுத்தப்படுவதில்லை.
- அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்க்கும் விளையாட்டே ஏறுதழுவுதல்.

---

71. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

★ Key Points

| | |
|---|---|
| நடந்து | வினையெச்சம் |
| பேசிய | பெயரெச்சம் |
| எடுத்தனன் உண்டான் | முற்றெச்சம் |
| பெரிய | குறிப்புப் பெயரெச்சம் |

★ Additional Information

வினையெச்சம்:

- ஒரு **எச்ச வினையானது வினைச் சொல்லைக் கொண்டு முடியுமானால்** அது **வினையெச்சம்** எனப்படும்.
- வினைச் சொற்கள் **உ, இ, ய், அ, ஆல்** என்ற **விகுதிகளைக்** கொண்டு முடியும்.
- (எ. கா) **படித்து, ஓடி**

பெயரெச்சம்:

- ஒரு **எச்ச வினையானது பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியுமானால்** அது **பெயரெச்சம்** எனப்படும்.
- பெயர்ச் சொற்கள் **அ, உம்** என்ற **விகுதிகளைக்** கொண்டு முடியும்.
- (எ. கா) **வந்த, சென்ற**

முற்றெச்சம்:

- ஒரு **வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு** முடிவது **முற்றெச்சம்** எனப்படும்.
- (எ. கா) **வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.**
- இத்தொடரில் **படித்தனள்** என்னும் **வினைமுற்றுச் சொல் படித்து என்னும் வினையெச்சப்** பொருளைத் தருகிறது.

குறிப்புப் பெயரெச்சம்:

- **காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லைக்** கொண்டு முடியும் எச்சச் சொல் **குறிப்புப் பெயரெச்சம்** ஆகும்.
- (எ. கா) **சிறிய** பையன், **அழகிய** கவிதை, **அரிய** மலர்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

72. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: **அடுக்குத்தொடர்**

⭐ Key Points

- **ஒரே சொல் பல முறை அடுக்கி** வரும் தொடர் **அடுக்குத்தொடர்** எனப்படும்.
- ஒரு **சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித்** தொடர்வது **அடுக்குத்தொடர்** ஆகும்.
- அடுக்குத் தொடரில் இடம்பெறும் சொற்கள் **பிரித்தால் பொருள்** தரும்.
- **உவகை, வெகுளி, அச்சம், விரைவு, அவலம், அசைநிலை** முதலான பொருள்களை உணர்த்தும்.
- (எ.கா) **வருக! வருக! வருக!**

⭐ Additional Information

இரட்டைக்கிளவி:

- **சொற்கள் இரட்டையாக இணைந்து வந்து, பிரித்தால் தனிப்பொருள் தராத** சொற்கள் **இரட்டைக் கிளவி** எனப்படும்.
- இது **அடைமொழியாகக் குறிப்புப் பொருளில்** வரும்.
- (எ.கா) மாலா **கலகல** வெனச் சிரித்தாள்.

உரிச்சொல் தொடர்:

- **உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்ந்து** வருவது **உரிச்சொல் தொடர்** ஆகும்.
- (எ.கா) **சாலச் சிறந்தது**
- **சால** என்பது **உரிச்சொல்** ஆகும்.
- அதனைத் தொடர்ந்து **சிறந்தது** என்ற சொல் நின்று **மிகச் சிறந்தது** என்ற பொருளைத் தருகிறது.

எழுவாய்த் தொடர்:

- **எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்ந்து** வருவது **எழுவாய்த் தொடர்** ஆகும்.
- (எ.கா) **இனியன் வந்தான்**
- **'இனியன்'** என்னும் **எழுவாயைத்** தொடர்ந்து **'வந்தான்'** என்னும் **பயனிலை** வந்துள்ளது.

Prepp Your Personal Exams Guide

73. **Answer: a**

**Explanation:**

சரியான பதில்: **மங்கலம்**

⭐ Key Points

- **'துஞ்சினார்'** எனும் சொல் **மங்கலம்** வகைச் சொல் ஆகும்.
- **மங்கலமில்லாத சொற்களை மங்கலமான வேறு சொற்களால்** கூறுவது **மங்கலம்** எனப்படும்.
- (எ.கா) துஞ்சினார், **சுடுகாடு – நன்காடு**
- **செத்தார்** என்பது **மங்கலமில்லாத சொல்** ஆகும். இதனை செத்தார் எனக் கூறாமல் **துஞ்சினார், இயற்கை எய்தினார், மறைந்தார், காலமானார்** போன்ற சொற்களால் குறிப்பிடுவது ஆகும்.

⭐ Additional Information

குழூஉக் குறி:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- ஒரு பொருள் அல்லது செயலை **பிறர் அறியாமல் ஒரு குழுவுக்கு மட்டும் புரியும் வகையில்** பயன்படுத்திக்கொள்ளும் சொற்கள் **குழூஉக்குறி** எனப்படும்.
- (எ. கா) **பொன்னைப் பறி** - பொற்கொல்லர் பயன்படுத்துவது

இடக்கரடக்கல்:

- பிறரிடம் **வெளிப்படையாகச் சொல்ல முடியாத சொற்களைத் தகுந்த பொருளுடைய வேறு சொற்களால்** கூறுவது இடக்கரடக்கல் ஆகும்.
- (எ. கா) **குழந்தை வெளியே போய்விட்டது**

மரூஉ:

- **இலக்கண நெறியிலிருந்து திரிந்து, சிதைந்து தானே மருவி** வழங்கி வரும் சொற்கள் **மரூஉ** எனப்படும்.
- (எ. கா) **தஞ்சாவூர் - தஞ்சை, திருநெல்வேலி - நெல்லை**

---

74. **Answer: c**

**Explanation:**

சரியான பதில்: **இலக்கணமுடயது**

⭐ Key Points

இலக்கணமுடையது:

- ஒரு சொல் இலக்கண நெறி மாறாமல் பொருள் தருவது இலக்கணமுடையது ஆகும்.

இலக்கணப் போலி:

⭐ Additional Information

- சொற்கள் இலக்கண முறையை பின்பற்றாமல்முன்னும்பின்னும் மாறி ஒரே பொருளை உணர்த்துவது இலக்கணப் போலி ஆகும்.
- சான்று: நுனிக்கிளை

மங்கலம்:

- மங்கலமில்லாத சொற்களை மங்கலமான வேறு சொற்களைக் கொண்டு கூறுவது மங்கலம் எனப்படும்.
- சான்று: சுடுகாடு – நன்காடு

மரூஉ:

- இலக்கண மரபுப்படி வழங்கும் ஒரு சொல் காலாபோக்கில் அச்சொல் இலக்கணம் சிதைந்து அதன் ஒலியோ, சொல்லோ மாற்றம் பெற்று வருவது மரூஉ எனப்படும்.

---

75. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: சினையாகு பெயர்

⭐ Key Points

- இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது சினையாகு பெயர் ஆகும்.
- ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- (எ.கா) தலைக்குப் பத்து ரூபாய் கொடு
- இதில் தலை என்னும் சினைப் பொருளின் பெயர்,பத்து ரூபாய் கொடு என்னும் குறிப்பால் அந்தத் தலையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

Additional Information

முதலாகு பெயர்:

- முதற்பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆகி வருவது முதலாகு பெயர் எனப்படும்.
- இது பொருளாகு பெயர் என்றும் அழைக்கப்படுகிறது.
- (எ.கா) முல்லை மணம் வீசியது.
- இதில் முல்லை என்பது முல்லைக் கொடியின் பெயர். இங்கே மணம் வீசியது என்னும் குறிப்பால் இது சினைப் பொருளாகிய முல்லைப் பூவுக்கு ஆகி வந்துள்ளது.

தொழிலாகு பெயர்:

- ஒரு தொழிலின் பெயர்அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.
- (எ.கா) பொங்கல் உண்டான்
- இத்தொடரில் பொங்கல் (பொங்குதல்) என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் உருவான உணவினைக் குறிப்பதால் இது தொழிலாகு பெயர் ஆகும்.

பண்பாகுபெயர்:

- ஒரு பண்பின் பெயர்அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும்.
- இது குணவாகு பெயர் என்றும் அழைக்கப்படுகிறது.
- (எ.கா) இனிப்பு உண்டான்
- இதில் இனிப்பு என்னும் சுவைப் பண்பின் பெயர் அச்சுவை கொண்ட பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

---

76. **Answer: d**

**Explanation:**

சரியான விடை: **ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர்.Key Points**இந்திய தேசிய இராணுவம்:

- இரண்டாம் உலக போரில் ஜப்பானியரிடம் மலேசியாவில் அங்கிலேய படைகள் சரணடைந்தனர்.
- சரணடைந்த ஆங்கிலேயப் படையில் இருந்த இந்திய வீரர்களைக் கொண்டு மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது.
- இந்திய தேசிய ராணுவத்திற்கு தலைமை ஏற்பதற்காக நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் நீர்மூழ்கிக் கப்பலின் மூலம் ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார்.
- 09-07-1943 அன்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தலைமையேற்றார்.
- டாக்டர் லட்சுமி தலைமையில் இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படை (ஜான்சிராணி படை) உருவாக்கப்பட்டது.
- இந்திய தேசிய இராணுவத்திற்கு, தமிழகத்தில் பெரும் படை திரட்டி தந்தவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.
- 18-03-1944 இல்மணிப்பூரின் மொய்ராங் பகுதியில் மூவண்ணக் கோடியை ஏற்றியது இந்திய தேசிய இராணுவம். ஆனால் இந்த வெற்றி இறுதிவரை நீடிக்கவில்லை.
- முழக்கம்: "டெல்லி சலோ".

Additional Information

பசும்பொன் முத்துராமலிங்கனார்:

- பிறப்பு: 30-10-1908.
- ஊர்: பசும்பொன் (இராமநாதபுரம் மாவட்டம்).

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- தந்தை: உக்கிரபாண்டியத்தேவர்.
- தாய்: இந்திராணி அம்மையார்.
- விடுதலை போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்.
- இவருடைய பேச்சு மக்களிடையே எழுச்சி ஏற்படுத்துவதாக இருந்தது.
- ஆங்கில அரசால் பல முறை சிறையில் அடைக்கப்பட்டார்.
- மேடைகளில் அரசியல் பேசக்கூடாதென்று வாய்ப்பூட்டு சட்டத்தின் மூலம் இவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
- தேசியம் காத்த செம்மல் என திரு.வி.க வால் போற்றப்பட்டவர்.
- நேதாஜியை தனது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டவர்.
- இவரின் முயற்சியினால் இந்திய தேசிய இராணுவத்தில் பல தமிழர்கள் இணைந்தனர்.
- நேதாஜி எனும் பெயரில் வார இதழ் ஒன்றை நடத்தினார்.
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.
- ஜமீன் விவசாயிகள் சங்கத்தை உருவாக்கியவர்.
- பாரதமாதா கூட்டுறவுப் பண்டகச்சசாலையை உருவாக்கி விசாயிகளின் விலைப் பொருள்களுக்குச் சரியான விலை கிடைக்க உதவினார்.

---

77. **Answer: b**

**Explanation:**

சரியான விடை: **அயோத்திதாசர்.அயோத்திதாசர்.**

⭐ Key Points

- பிறப்பு: **20-05-1845.**
- ஊர்: **சென்னை.**
- இயற்பெயர்: **காத்தவராயன்.**
- சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடத்தில் கொண்டுச் சென்றதில் **தந்தை பெரியாருக்கும் அண்ணல் அம்பேத்காருக்கும் முன்னோடியாக** திகழ்ந்தவர்.
- இவர் **தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை** என போற்றுவர்.
- ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த இவர் பல இன்னல்களை பள்ளி பருவத்தில் சந்தித்தார்.
- தனது **ஆசிரியரான அயோத்திதாசப் பண்டிதரிடம் கல்வியும் சித்தமருத்துவமும்** பயின்றார்.
- தன் மீது அன்புகாட்டிய **ஆசிரியர் அயோத்திதாசப் பண்டிதரின் பெயரையே தனது பெயராக** ஏற்றுக்கொண்டார்.
- **பர்மாவுக்கு** சென்ற இவர் அங்கு கூலித்தொழிலாளிகளாக வேலை செய்து வந்த தமிழர்களின் உரிமைக்காக போராடினார்.
- தமிழகம் திரும்பிய பின் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்கும் முன்னேற்றத்துக்கும் உழைத்தார்.
- இவர் **தமிழ், பாலி, வடமொழி, ஆங்கிலம்** ஆகிய மொழிகளை அறிந்திருந்தார்.
- **ஒருபைசாத்தமிழன்** எனும் இதழை **1907**ஆம் ஆண்டு காலணா விலையில் வெளியிட்டார். ஓராண்டிற்கு பின் இதழின் பெயரை **தமிழன்** என மாற்றினார்.
- இவர் **1892**ஆம் ஆண்டு **திராவிட மகாஜன சங்கம்** எனும் அமைப்பை உருவாக்கினார்.

⭐ Additional Information

பெரியார்:

- இயற்பெயர்: ஈ . வெ . ராமசாமி.
- காலம்: 1879-1973.
- ஊர்: ஈரோடு.
- இயக்கம்: சுயமரியாதைஇயக்கம் (1925).
- இதழ்கள்: குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் ( ஆங்கிலஇதழ் ).
- யுனெஸ்கோ நிறுவனம் பெரியாருக்கு ' தெற்குஆசியாவின்சாக்ரடீஸ் ' என 27-06-1970 அன்று பட்டம் வழங்கியது.

அண்ணல் அம்பேத்கர்:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- பிறப்பு: 14-04-1891.
- இயற்பெயர்: பீமாராவ்.
- தந்தை: இராம்ஜி சக்பால்.
- தாய்: பீமாபாய்.
- 1915ஆம் ஆண்டு அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.
- லண்டன் சென்று முனைவர் பட்டமும், பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.
- 1927ஆம் ஆண்டு மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை முன்னெடுத்தார்.
- வட்டமேசை மாநாட்டில் கலந்துக் கொண்டு ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காக பேசினார்.
- இந்தியாவின் அரசியலமைப்பை உருவாக்கும் குழுவின் தலைவராக செயல்பட்டார்.
- சுதந்திர இந்தியாவில் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராக பொறுப்பேற்றார்.
- 1946ஆம் ஆண்டில் மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.
- சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் அவருடைய முயற்சியில் உருவானது.
- இவர் எழுதிய "இந்தியாவின் தேசிய பங்குவீதம்" எனும் நூல் மிகவும் புகழ்பெற்றது.
- 1990ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு "பாரத ரத்னா" விருது வழங்கியது.

காளிதாசர்:

- சம்ஸ்கிருத கவிஞர்.
- படைப்புகள்: அபிஞான சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், மளவிகாக்கினிமித்ரம், ருது ஸம்ஹாரம்.

---

78. **Answer: a**

**Explanation:**

சரியான விடை: பண்படாத நிலம்.

⭐ Key Points

- "கல்வி இல்லாத பெண்கள்

  களர்நிலம் அந்நி லத்தில்
  புல்விளைந் திடலாம் நல்ல
  புதல்வர்கள் விளைதல் இல்லை
  கல்வியை உடைய பெண்கள்
  திருந்திய கழனி அங்கே
  நல்லறிவு உடைய மக்கள்
  விளைவது நவில வோநான்!"

- மேற்கண்ட வரிகள் இடம்பெற்றுள்ள நூல் **குடும்ப விளக்கு (இரண்டாம் பகுதியில் உள்ள விருந்தோம்பல் தலைப்பில் தலைவியின் பேச்சில் அமைந்துள்ள கவிதை).**

குடும்ப விளக்கு:

- இயற்றியவர்: **பாரதிதாசன்.**
- பெண்களுக்கு கல்வி இன்றியமையாதது என்பதை இந்நூல் விளக்கி கூறுகிறது.
- இந்நூல் **ஐந்து பகுதிகளாக** பிரிக்கப்பட்டுள்ளது.

⭐ Additional Information

பாவேந்தர் பாரதிதாசன்:

- இயற்பெயர்: கனக சுப்புரத்தினம்.
- பாரதியார் மீதான பற்றுதல் காரணமாக தனது பெயரை பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- சிறப்புப் பெயர்கள்: பாவேந்தர், புரட்சிக்கவிஞர்.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- இவர் இயற்றிய பிசிராந்தையார் எனும் நாடக நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.
- சில படைப்புகள்: அம்மைச்சி (நாடகம்), உயிரின் இயற்கை, நீலவண்ணன் புறப்பாடு, விடுதலை வேட்கை, ரஸ்புடீன் (நாடகம்), அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, இருந்த வீடு, தமிழியக்கம்.

---

79. **Answer: a**

**Explanation:**

சரியான விடை: **கொய்யாக்கனி**.

⭐ Key Points

- பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் ஒன்று – **கொய்யாக்கனி**.

பெருஞ்சித்திரனார்:

- இயற்பெயர்: **துரை. மாணிக்கம்**.
- சிறப்பு பெயர்: **பாவலரேறு**.
- **தமிழ்ச்சிட்டு**, **தென்மொழி** ஆகிய இதழ்களின் மூலமாக தமிழுணர்வை பரப்பியவர்.
- இவர் இயற்றிய **திருக்குறள் மெய்ப்பொருளுரை** முக்கியத்துவம் வாய்ந்த படைப்பாகும்.
- சில படைப்புகள்: **உலகியல் நூறு**, **நூறாசிரியம்**, **பாவியக்கொத்து**, **எண்சுவை எண்பது**, **கனிச்சாறு**, **பள்ளிப் பறவைகள்**, **மகபுகுவஞ்சி**.
- அரசு இவருடைய **நூல்களை நாட்டுடைமையாக்கியுள்ளது** .

⭐ Additional Information

- **தைப்பாவை** நூலை இயற்றியவர் **கண்ணதாசன்**.
- **மாங்கனி** நூலை இயற்றியவர் **கண்ணதாசன்**.

கண்ணதாசன்:

- இயற் பெயர்: முத்தையா.
- சிறப்புப் பெயர்: கவியரசு.
- தமிழக அரசின் அரசவைக்கு கவிஞராக இருந்தவர்.
- பல திரையிசைப் பாடல்களை எழுதியுள்ளார்.
- பிற படைப்புகள்: அர்த்தமுள்ள இந்து மதம், மனவாசம், வனவாசம், சேரமான் காதலி.

---

80. **Answer: a**

**Explanation:**

சரியான பதில்: **கொடிமுல்லை**

⭐ Key Points

- வாணிதாசன் இயற்றிய நூல்கள்: தமி**ழச்சி, கொடிமுல்லை, தொடுவானம்,** எழிலோவியம், தீர்த்த யாத்திரை, எழில் விருத்தம், பாட்டு பிறக்குமடா, குழந்தை இலக்கியம், பெரிய இடத்து செய்தி.
- வாணிதாசன் இயற்பெயர்: எத்திராசலு அரங்கசாமி
- பிறந்த நாள்: 22 - 07 - 1915
- பிறந்த ஊர்: வில்லியனூர்
- இவர் பாரதிதாசனின் மாணவர் ஆவார்.
- சிறப்புப் பெயர்கள்: புதுமைக் கவிஞர், பாவலரேறு, பாவலர்மணி, தமிழ்நாட்டுத் தாகூர், தமிழ்நாட்டு வோர்ட்ஸ்வொர்த்.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

பாரதிதாசன்.

⭐ Additional Information

- இயற்பெயர்: கனகசுப்புரத்தினம்
- தோற்றம்: 29 - 04 - 1891
- மறைவு: 21 - 04 - 1964
- பிறந்த ஊர்: புதுச்சேரி
- சிறப்புப் பெயர்கள்: பாவேந்தர், புரட்சிக் கவிஞர், தமிழ்நாட்டு இரசூல் கம்சதேவ்.
- இயற்றிய நூல்கள்: இசை அமுது, பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, குறிஞ்சித்திட்டு, தமிழியக்கம், மணிமேகலை வெண்பா, இன்பத்தமிழ்.
- இயற்றிய நாடகங்கள்: சௌமியன், நல்ல தீர்ப்பு, பிசிராந்தையார், சக்திமுற்றப் புலவர், அமைதி ஊமை.
- பாரதிதாசனின் "பிசிராந்தையார்" என்ற நாடக நூலுக்குச் சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.

பாரதியார்:

- இயற்பெயர்: சுப்பிரமணியம்
- தோற்றம்: 11 - 12 - 1882
- மறைவு: 11 - 09 - 1921
- பிறந்த ஊர்: எட்டயபுரம்
- சிறப்புப் பெயர்கள்: தேசியக்கவி, விடுதலைக்கவி, அமரக்கவி, முன்னறி புலவன், மகாகவி, பைந்தமிழ்த் தேர்ப்பாகன்.
- இதழ்கள்: சக்கரவர்த்தினி, இந்தியா, விஜயா, கர்மயோகி, பாலபாரத்.
- சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்தேனீ, புதிய அறம்பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன், நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா எனப் பாரதிதாசனால் பாராட்டப்பெற்றவர்.
- "**பாட்டுக்கொரு** புலவன் பாரதி" எனக் கவிமணி பாராட்டியுள்ளார்.
- இயற்றிய கவிதை நூல்கள்:சுதேச கீதங்கள், **கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, ஜன்மபூமி.**
- பாரதியார் எழுதிய நாடக நூல் ஜெகசித்திரம் ஆகும்.

---

81. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: **செயல்**

⭐ Key Points

- **வினை** என்னும் சொல்லுக்குரிய பொருள் **செயல்** ஆகும்.
- **கழனி** என்ற சொல்லின் பொருள் **வயல்** ஆகும்.
- **கயல்** என்ற சொல்லின் பொருள் **கெண்டைமீன்** ஆகும்.
- **அயல்** என்ற சொல்லின் பொருள் **அருகிடம்** ஆகும்.

⭐ Additional Information

- தண்பெயல் - **குளிர்ந்த மழை**
- இறடி - **தினை**
- பொம்மல் - **சோறு**
- கயம் - **நீர்நிலை**

---

82. **Answer: c**

**Explanation:**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

சரியான பதில்: <u>விளி</u>

⭐ <u>Key Points</u>

- எட்டாம் வேற்றுமையை **விளி வேற்றுமை** என்று அழைப்பர்.
- **படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி** அழைப்பது **விளி வேற்றுமை** ஆகும்.
- எட்டாம் வேற்றுமைக்கு **உருபு இல்லை.**
- இது **விளிப்பொருளில்** வரும்.
- (எ. கா) **அண்ணா வா!**

⭐

<u>Additional Information</u> **எழுவாய்** வேற்றுமை:

- எழுவாயுடன் **வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான** பொருளைத் தருவது **முதல் வேற்றுமை** ஆகும்.
- முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்றும் அழைக்கப்படுகிறது.
- (எ. கா) பாவை வந்தாள்

**இரண்டாம் வேற்றுமை:**

- இரண்டாம் வேற்றுமை உருபு: **'ஐ'**
- ஒரு **பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக்** காட்டும். எனவே இது **செயப்படுபொருள் வேற்றுமை** எனப்படும்.
- இரண்டாம் வேற்றுமை **ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை** ஆகிய ஆறுவகையான பொருள்களில் வரும்.
- (எ. கா) **கபிலர் பரணரைப் புகழ்ந்தார்**
- **பரணர் + ஐ** - இதில் ஐ என்ற **இரண்டாம் வேற்றுமை உருபு** பயின்று வந்துள்ளது.

**பயனிலை:**

- ஒரு **தொடரில் பயன் நிலைத்து இருக்கும்** இடத்தைப் **பயனிலை** என்கிறோம்.
- **வினைச்சொல்லே** பயனிலை ஆகும்.
- (எ. கா) **கனகாம்பரம் பூத்தது.** இதில் **"பூத்தது"** பயனிலை ஆகும்.

---

83. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: <u>பண்புப்பெயர்</u>

⭐ <u>Key Points</u>

- **வட்டம், செம்மை, தீமை** இவை **பண்புப்பெயர்கள்** ஆகும்.
- **நிறம், வடிவம், சுவை, குணம்** போன்ற **பண்புகளைக் குறிக்கும்** சொற்கள் **பண்புப் பெயர்** எனப்படும்.
- **பொருளின் பண்பைக்** குறிக்கும் பெயர் **பண்புப்பெயர்** ஆகும்.
- (எ. கா) **வட்டம், செம்மை, நன்மை**

⭐ <u>Additional Information</u>

**சினைப்பெயர்:**

- பொருள்களின் **உறுப்புகளைக் குறிக்கும்** பெயர் **சினைப்பெயர்** எனப்படும்.
- **சினை** என்ற சொல்லின் **உறுப்பு** ஆகும்.
- (எ. கா) **கை, கண், கிளை, இலை**

**காலப்பெயர்:**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- ஏதேனும் **ஒரு காலத்தைக் குறிக்கும்** பெயர் **காலப்பெயர்** எனப்படும்.
- (எ. கா) **திங்கள் கிழமை, தை, காலை, மாலை**

பொருட்பெயர்:

- **உயிர் உள்ள, உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களைக்** குறிப்பது **பொருட்பெயர்** எனப்படும்.
- (எ. கா) **வள்ளி, பொன், கிளி**

---

84. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: **கூற்று 1 சரி கூற்று 2 தவறு**

⭐ Key Points

- ஏவல் வினைமுற்று முன்னிலையில் வரும் என்பது சரியான கூற்றாகும்.
- ஏவல் வினைமுற்று விகுதி பெற்றே வரும் என்பது தவறான கூற்றாகும்.
- முன்னிலையில் உள்ள **ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு**கூறுவது**ஏவல் வினைமுற்று** எனப்படும்.
- **ஆய், இ, அல், ஏல், ஆல்** முதலிய **விகுதிகளைப்** பெற்றும், பெறாமலும் வரும்.
- **வகைகள்:**
  - ஏவல் ஒருமை, ஏவல் பன்மை
- (எ. கா) **பாடு, ஓடு**

⭐ Additional Information

**ஏவல் ஒருமை வினைமுற்று:**

- ஏவல் ஒருமை வினைமுற்று **உடன்பாட்டு ஏவல் ஒருமை, எதிர்மறை ஏவல் ஒருமை** என **இரு** வகைப்படும்.
- உடன்பாட்டு ஏவல் ஒருமை:
  - ஒரு சொல்லின் **வினையடிகளே உடன்பாட்டு ஏவல் ஒருமை** வினை ஆகும்.
  - (எ. கா) **வா, நில்**
- எதிர்மறை ஏவல் ஒருமை:
  - வினையடிகளுடன் **எதிர்மறை இடைநிலைப் பெற்று அமையும் வினைகள் எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று** எனப்படும்.
  - (எ. கா) **வராதே, ஓடாதே**

**ஏவல் பன்மை வினைமுற்று:**

- ஏவல் பன்மை வினைமுற்று **உடன்பாட்டு ஏவல் பன்மை, எதிர்மறை ஏவல் பன்மை** என **இரு** வகைப்படும்.
- **உடன்பாட்டு ஏவல் பன்மை:**
  - வினையடிகளுடன் **ஏவல் பன்மை விகுதிகள் இணைந்து உடன்பாட்டு ஏவல் பன்மை வினை முற்று**அமையும்.
  - ஏவல் பன்மை விகுதிகள்: **ஈர், உம், மின்**
  - (எ. கா) **உண்ணீர், உண்மின்**
- எதிர்மறை ஏவல் பன்மை:
  - வினையடியுடன் **எதிர்மறை இடைநிலைகளும் முன்னிலைப் பன்மை விகுதிகளும்** இணைந்து **எதிர்மறை ஏவல் பன்மை**வினைமுற்று அமையும்.
  - (எ. கா) **ஓடாதீர்கள், நிற்காதீர்கள்**

---

85. **Answer: c**

**Explanation:**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

சரியான பதில்: நடக்கிறது - நட

⭐ Key Points

- **நடக்கிறது** என்ற வினைமுற்று சொல்லின் வேர்ச்சொல் **நட** ஆகும்.
- **பேசினாள்** என்ற வினைமுற்று சொல்லின் வேர்ச்சொல் **பேசு** ஆகும்.
- **தருகின்றனர்** என்ற வினைமுற்று சொல்லின் வேர்ச்சொல் **தா** ஆகும்.
- **வருக** என்ற வினைமுற்று சொல்லின் வேர்ச்சொல் **வா**ஆகும்.

⭐ Additional Information

- பயின்றாள் - **பயில்**
- கேட்டார் - **கேள்**
- உறங்கினாள் - **உறங்கு**
- வாழிய - **வாழ்**

---

86. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

⭐ Key Points

| | |
|---|---|
| கலாம் | போர் |
| குழீஇ | ஒன்றுகூடி |
| தோம் | குற்றம் |
| கோட்டி | மன்றம் |

⭐ Additional Information

- **வசி** என்ற சொல்லின் பொருள் **மழை** ஆகும்.
- **தூணம்** என்ற சொல்லின் பொருள் **தூண்** ஆகும்.
- **தாமம்** என்ற சொல்லின் பொருள் **மாலை** ஆகும்.
- **வேதிகை** என்ற சொல்லின் பொருள் **திண்ணை** ஆகும்.

---

87. **Answer: c**

**Explanation:**

சரியான பதில்: சிலப்பதிகாரம்

⭐ Key Points

சிலப்பதிகாரம்:

- ஆசிரியர்: இளங்கோவடிகள்
- காதைகள்: 30
- பாவகை: நிலைமண்டில ஆசிரியப்பா
- சமயம்: சமணம்
- சிறந்த உரை எழுதியவர்: அடியார்க்கு நல்லார்

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- சிறப்புப் பெயர்கள்: முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், மூவேந்தர் காப்பியம், புரட்சிக் காப்பியம், பொதுமை காப்பியம்.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- காண்டங்கள் மற்றும் காதைகள்:
  - புகார்க் காண்டம் - 10 காதைகள்
  - மதுரைக் காண்டம் - 13 காதைகள்
  - வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்
- இது ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகும்.

⭐ Additional Information

தொல்காப்பியம்:

- ஆசிரியர்: தொல்காப்பியர்
- இயல்கள்: 27
- இந்நூல் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் ஆகும்.
- தொல்காப்பியம் 1610 நூற்பாக்களாலானது.
- தொல்காப்பியம் உரையாசிரியர்கள்: இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார்.
- இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

கம்பராமாயணம்:

- ஆசிரியர்: கம்பர்
- பாவகை: கலி விருத்தம்
- காண்டம்: 6
- சமயம்: வைணவம்
- சிறப்புப் பெயர்கள்: கம்ப நாடகம், இயற்கை பரிணாமம், கம்ப சித்திரம், தோமறுமாக்கதை.
- இது வடமொழியில் வால்மீகி எழுதிய ராமாயணம் என்ற நூலை முதல் நூலாகக் கொண்டு இயற்றப்பட்ட வழி நூல் ஆகும்.
- இதற்கு கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் ஆகும்.
- இதன் ஆறு காண்டங்கள்:
  - பால காண்டம்
  - அயோத்திய காண்டம்
  - ஆரண்ய காண்டம்
  - கிட்கிந்தா காண்டம்
  - சுந்தர காண்டம்
  - யுத்த காண்டம்

மணிமேகலை:

- ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றாகும்.
- இயற்றியவர்: சீத்தலைச் சாத்தனார்
- சிறப்புப் பெயர்: மணிமேகலைத் துறவு (துறவு வாழ்க்கையை பற்றி பேசுவதால் இப்பெயர் பெற்றது).
- சமயச் சார்பு : பௌத்தம்.
- சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்கும் தொடர்புடையதால் இரட்டைக் காப்பியம் என அழைக்கப்படுகின்றது.

---

88. **Answer: c**

**Explanation:**

சரியான விடை **ஐஞ்சிறு காப்பியங்களுள்**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

⭐ Key Points

நீலகேசி:

- ஆசிரியர்: பெயர் தெரியவில்லை
- பாவகை: விருத்தப்பா
- சமயம்: சமணம்
- தமிழில் தோன்றிய முதல் தருக்க நூல்.
- நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும்.
- இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட பதினொரு பகுதிகளிலும் மொத்தமாக 894 பாடல்கள் உள்ளன.
- இந்நூலுக்கு நீலகேசித் தெருட்டு என்றும் பெயர் உண்டு.
- இந்நூல் குண்டலகேசி நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது.
- இந்நூலின் உரையாசிரியர்சமய திவாகர வாமன முனிவர் ஆவார்.

⭐ Additional Information

- நீலகேசி கூறும் நோயின் வகைகள் மூன்று ஆகும். அவை,
- மருந்தினால் நீங்கும் நோய்கள்.
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்.
- வெளித்தோற்றத்தில் அடங்கி இருப்பனபோல தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்கள் ஆகும்.

---

89. **Answer: b**

**Explanation:**

சரியான விடை: **ஔடதம்**.

⭐ Key Points

- " அறிவியல் சிந்தனை கொள்

ஆய்வில் மூழ்கு
இயன்றவரை புரிந்துகொள்
ஈடுபாட்டுடன் அணுகு
உண்மை கண்டறி
ஊக்கம் வெற்றிதரும்
என்றும் அறிவியலே வெல்லும்
ஏன் என்று கேள்
ஐயம் தெளிந்து சொல்
ஒருமித்துச் செயல்படு
ஓய்வற உழை
ஔடதமாம் அனுபவம்" - அறிவியல் ஆத்திசூடி

- அறிவியல் ஆத்திசூடி எனும் நூலை இயற்றியவர் **நெல்லை சு. முத்து**.

நெல்லை சு. முத்து:

- **கவிஞர், அறிவியல் அறிஞர்.**
- **விக்ரம் சாராபாய் விண்வெளி மையம், சதீஷ்தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம்** ஆகிய ஆராய்ச்சி நிறுவனங்களில் பணியாற்றியவர்.
- **கட்டுரைகள், அறிவியல் கவிதைகள்** போன்றவற்றை இயற்றியுள்ளார்.
- **எண்பதுக்கும்** மேலான நூல்களை இயற்றியவர்.
- **மேதகு அப்துல் கலாம்** அவர்களால் "**தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்**" என பாராட்டப்பட்டவர்.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

⭐ Additional Information

- அகர வரிசையில் அறிவுரை சொல்லும் இலக்கியம் - **ஆத்திசூடி**
- **ஔவையாரின்** ஆத்திசூடி மிகவும் புகழ் பெற்றது.
- "**புதிய ஆத்திசூடி**" என **பாரதியார்** காலத்திற்கேற்றவாறு இயற்றினார்.

பாரதியார்:

- ஊர்: எட்டயபுரம்.
- காலம்: 1882 - 1921.
- கவிஞர், கட்டுரையாளர்.
- இந்தியா, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களில் ஆசிரியராக பணியாற்றினார்.
- சில படைப்புகள்: பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி, சின்னஞ்சிறு கிளியே, சந்திரிகையின் கதை, விநாயகர் நான்மணிமாலை.

ஔவையார்:

- ஔவையார் என பெயர் கொண்ட பல பெண் புலவர்கள் இருந்துள்ளனர்.
- சங்ககால ஔவையார்:
  - சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் பாடல்களை இயற்றியுள்ளார்.
  - இவருடைய காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் ஆகும்.
- இடைக்கால ஔவையார்:
  - இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையார் அங்கவை சங்கவை திருமணத்தை நடத்தியவர்.
  - இவருடைய காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் ஆகும்.
- சோழர் காலத்தில் (கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு) வாழ்ந்த ஔவையார் நல்வழி, மூதுரை, அசதிக்கோவை, கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி ஆகியவற்றை இயற்றியவர்.
- சமய புலவராக (கி.பி. பதினான்காம் நூற்றாண்டு) வாழ்ந்த ஔவையார் ஔவை குறள், விநாயகர் அகலல் ஆகியவற்றை இயற்றியவர்.

---

**90. Answer: a**

**Explanation:**

சரியான பதில்: **காரியாசான்**

⭐ Key Points

சிறுபஞ்சமூலம்:

- கண்டங்கத்திரி, சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது.
- அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கும்.
- பஞ்சம் - ஐந்து, மூலம் - வேர், சிறுபஞ்சமூலம் - ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன்பொருள்.
- சிறுபஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.
- ஆசிரியர்: காரியாசான்
- பாடல்கள்: 102
- பாவகை: வெண்பா
- இந்நூல் தொல்காப்பியர் குறிப்பிடும் "அம்மை" என்ற வனப்பிற்கு உரியது.

⭐ Additional Information

காரியாசான்:

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- சமயம்: சமணம்
- மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் ஆவார்.
- காரி என்பது இயற்பெயர், ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர் ஆகும்.
- காரியாசனை மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் சிறப்பிக்கிறது

---

91. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: **கூற்று 1, 2 சரி**

⭐ Key Points

- **ஆய்த எழுத்து** சொல்லின் **முதலில் வராது**மற்றும் ஆய்த எழுத்து சொல்லின் **இறுதியில் வராது** என்பது சரியான கூற்றாகும்.
- **ஆய்த எழுத்து** சொல்லின் **இடையில்** மட்டுமே வரும்.
- ஆய்த எழுத்துக்கு **இன எழுத்து இல்லை.**
- ஆய்த எழுத்து ஒலிக்கும் கால அளவு : **2 மாத்திரை**
- **எ.கா - அஃது, பஃறுளி**

⭐ Additional Information

- **உயிர் எழுத்துகள்** பன்னிரண்டும் சொல்லின் **முதலில்** வரும்.
- **மெய் எழுத்துகள்** பதினெட்டும் சொல்லின் **இடையில்** வரும்.
- **உயிர்மெய் எழுத்துகள்** சொல்லின் **இடையில்** வரும்.
- **ஞ், ண், ந், ம், ய் ,ர், ல், வ், ழ், ள், ன்** ஆகிய மெய்யெழுத்துகள் **பதினொன்றும்** மொழியின் **இறுதியில்** வரும்.

---

92. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: **உ**

⭐ Key Points

- **ஔ** என்ற நெட்டெழுத்துக்கு இன எழுத்தாக வருவது **உ** ஆகும்.
- சில **எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம்** ஆகியவற்றில் **ஒற்றுமை** உள்ள எழுத்துகள் **இன எழுத்துகள்**ஆகும்.
- உயிர் எழுத்துகளில் **குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும்** இன எழுத்துகள் ஆகும்.
  - (அ, ஆ) (இ, ஈ) (உ, ஊ) (எ, ஏ) (ஐ, இ) (ஒ, ஓ) (ஔ, உ )
- குறில் எழுத்து இல்லாத **ஐ** என்னும் எழுத்துக்கு **இ** என்பது இன எழுத்தாகும்.

⭐ Additional Information

- **ஆய்த** எழுத்துக்கு **இன எழுத்து இல்லை.**
- ஆறு **வல்லின** மெய் எழுத்துகளுக்கும் ஆறு **மெல்லின எழுத்துகளும்** இன எழுத்துகள் ஆகும்.
  - (ங், க்) (ஞ், ச்) (ட், ண்) (த், ந்) (ம், ப்) (ற், ன்)
- இடையின எழுத்துக்கள் **ய், ர், ல், வ், ழ், ள்**ஆகியவற்றிற்கு இன எழுத்து இல்லை.

---

93. **Answer: a**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

**Explanation:**

சரியான பதில்: 1, 3

⭐ Key Points

- **குறில் எழுத்தை** ஒலிக்கும் கால அளவு :1 **மாத்திரை**
- **நெடில் எழுத்தை** ஒலிக்கும் கால அளவு : **2 மாத்திரை**
- **மெய் எழுத்துக்கள்** ஒலிக்கும் கால அளவு : **1/2 மாத்திரை**
- **ஆய்த எழுத்து** ஒலிக்கும் கால அளவு : **2 மாத்திரை**

⭐ Additional Information

- **குறுகி ஒலிக்கும்** எழுத்துகள் **குறில் எழுத்துகள்** எனப்படும்.
- **அ, இ, உ, எ, ஒ** என **ஐந்து** எழுத்துகளும் **உயிர்க்குறில்** எழுத்துகளாகும்.
- **நீண்டு ஒலிக்கும்** எழுத்துகள் **நெடில் எழுத்துகள்** எனப்படும்.
- **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** என **ஏழு** எழுத்துகளும் **உயிர் நெடில்** எழுத்துகளாகும்.

---

94. **Answer: c**

**Explanation:**

சரியான பதில்: **ஐ**

⭐ Key Points

- அ, இ, ஐ, ஒ - ஆகிய நான்கில் நீண்டு ஒலிக்கும் எழுத்து **ஐ** ஆகும்.
- **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** என **ஏழு** எழுத்துகளும் நீண்டு ஒலிக்கும்.
- **நீண்டு ஒலிக்கும்** எழுத்துகள் **நெடில் எழுத்துகள்** எனப்படும்.

⭐ Additional Information

- **அ, இ, உ, எ, ஒ** என **ஐந்து** எழுத்துகளும் **குறுகி** ஒலிக்கும்.
- **குறுகி ஒலிக்கும்** எழுத்துகள் **குறில் எழுத்துகள்** எனப்படும்.
- **குறில் எழுத்துகள்**ஒலிக்கும் கால அளவு :1 **மாத்திரை**
- **நெடில் எழுத்துகள்**ஒலிக்கும் கால அளவு : **2 மாத்திரை**
- **மெய் எழுத்துக்கள்** ஒலிக்கும் கால அளவு : **1/2 மாத்திரை**
- **ஆய்த எழுத்து** ஒலிக்கும் கால அளவு : **2 மாத்திரை**

---

95. **Answer: b**

**Explanation:**

சரியான விடை **எழுத்து**

⭐ Key Points

எழுத்து

- ஒலி வடிவாக எழுப்பப்படுவதும், வரிவடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படும்.

⭐ Additional Information

Prepp Download Prepp APP GET IT ON Google Play

உயிர் எழுத்துக்கள்

- உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துக்கள் பிறக்கின்றன.அ முதல் ஔ வரை 12 உயிரெழுத்துகள் உள்ளன.
- ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு. எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.

மாத்திரை

- ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ, ஒரு முறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.
- குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு 1 மாத்திரை.
- நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு 2 மாத்திரை.

மெய்யெழுத்துக்கள்

- மெய் என்பது உடம்பு என பொருள்படும். பதினெட்டு மெய்யெழுத்துக்கள் உள்ளன.

உயிர்மெய்

- மெய்யெழுத்துக்கள் பதினெட்டுடன் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றுபவை உயிர் மெய் எழுத்துக்கள்.

ஆய்த எழுத்து

- ஃ என்ற ஆய்த எழுத்தும் உள்ளது. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு அரை மாத்திரை.

---

96. **Answer: a**

**Explanation:**

சரியான விடை **மெய்ப்பொருள்**

⭐ Key Points

- எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

  மெய்ப்பொருள் காண்ப தறிவு

- இக்குறள் பொருட்பாலில் உள்ள அறிவுடைமை என்ற அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.
- குறளின் பொருள்:
  - எந்த பொருளை யார் யார் இடம் கேட்டாலும் கேட்டவாறே கொள்ளாமல் அந்த பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு ஆகும்.

---

97. **Answer: a**

**Explanation:**

சரியான பதில்: **கூற்று 1 சரி 2 தவறு**

⭐ Key Points

- திருவள்ளுவர் **இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்** என்பது **சரியான** கூற்றாகும்.
- **உலகப்பொது மறை** எனப் போற்றப்படும் நூல் **திருவாசகம்** என்பது **தவறான** கூற்றாகும்.
- உலகப்பொது மறை எனப் போற்றப்படும் நூல் **திருக்குறள்** ஆகும்.

Prepp Download Prepp APP GET IT ON Google Play

⭐ Additional Information

திருவாசகம்:

- திருவாசகம் இயற்றியவர் **மாணிக்கவாசகர்** ஆவார்.
- திருவாசகம் **சைவ சமயக் கடவுளான சிவன் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு** ஆகும்.
- **பன்னிரு சைவ சமயத் திருமுறைகளில் திருவாசகம் எட்டாம் திருமுறையாக** உள்ளது.
- **ஜி. யு. போப்** இதனை **ஆங்கிலத்தில்** மொழிபெயர்த்துள்ளார்.

திருவள்ளுவர்:

- சிறப்புப் பெயர்கள்: **நாயனார், மாதானுபங்கி,தேவர், முதற் பாவலர், தெய்வ புலவர், நான்முகனார்,செந்நாப்போதார், பொய்யில் புலவர், பெருநாவலர்,வான்புகழ் வள்ளுவர்.**
- பாரதியார் **"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகல் கொண்ட தமிழ்நாடு"** என்று பாராட்டியுள்ளார்.
- பாரதிதாசன் **"இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே"** என்று வள்ளுவரைப் பாராட்டியுள்ளார்.

திருக்குறள்:

- ஆசிரியர்: **திருவள்ளுவர்**
- பாவகை: **குறள் வெண்பா**
- அதிகாரம்: **133**
- குறள்கள்: **1330**
- பால்கள்: **3**
- இயல்கள்: **9**
- சிறப்புப் பெயர்கள்: **தமிழ் மறை, உலகப்பொதுமறை, முப்பால் நூல், உத்தரவேதம், தெய்வ நூல், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, திருவள்ளுவ பயன், பொருளுறை, முதுமொழி, திருவள்ளுவம்.**
- திருவள்ளுவர் காலம்: **கி. மு. 31ஆம் நூற்றாண்டு.**
- திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள்: **மணக்குடவர், தாமத்தர், நச்சர், மல்லர், பரிப்பெருமாள், கலிங்கர், பரிமேழலகர், பரிதி, திருமலையர்.**
- திருக்குறள் **முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812** ஆகும்.
- திருக்குறள் மூலத்தை **முதன் முதலில் அச்சிட்டவர் தஞ்சை ஞானப்பிரகாசம்** ஆவார்.

---

98. **Answer: d**

**Explanation:**

சரியான பதில்: **திருவள்ளுவமாலை**

⭐ Key Points

- திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் **திருவள்ளுவமாலை** ஆகும்.
- இந்நூலில் **53** புலவர்கள் பாடிய **55** பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

⭐ Additional Information

தெய்வமணிமாலை:

- இராமலிங்க அடிகள் இயற்றிய **திருவருட்பாவில் 5 ஆம் திருமுறையில்** இடம் பெற்ற நூல் **தெய்வமணிமாலை** ஆகும்.
- இராமலிங்க அடிகள் **சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டி தெய்வமணி மாலை** என்னும் பாடலைப் பாடியுள்ளார்.

திருக்குறள்:

- ஆசிரியர்: **திருவள்ளுவர்**
- பாவகை: **குறள் வெண்பா**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

- அதிகாரம்: 133
- குறள்கள்: 1330
- பால்கள்: 3
- இயல்கள்: 9
- சிறப்புப் பெயர்கள்: **தமிழ் மறை, உலகப்பொதுமறை, முப்பால் நூல், உத்தரவேதம், தெய்வ நூல், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, திருவள்ளுவ பயன், பொருளுறை, முதுமொழி, திருவள்ளுவம்.**
- திருவள்ளுவர் காலம்: **கி. மு. 31ஆம் நூற்றாண்டு.**
- திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள்: **மணக்குடவர், தாமத்தர், நச்சர், மல்லர், பரிப்பெருமாள், கலிங்கர், பரிமேழலகர், பரிதி, திருமலையர்.**
- திருக்குறள் **முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812** ஆகும்.
- திருக்குறள் மூலத்தை **முதன் முதலில் அச்சிட்டவர் தஞ்சை ஞானப்பிரகாசம்** ஆவார்.

---

99. **Answer: b**

**Explanation:**

சரியான பதில்: **பெருமைக்கும், சிறுமைக்கும்**

⭐ Key Points

- "தத்தம் கருமமே கட்டளைக் கல்" - **பெருமைக்கும், சிறுமைக்கும்** என்று வள்ளுவர் கூறுகிறார்.

திருக்குறள்:

- '**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்** தத்தம்
கருமமே கட்டளைக் கல்'.

பொருள்:

- ஒருவரது **சிறப்புக்கும் குறைபாட்டிற்கும்** அவரவர் செய்கையே கட்டளைக் கல் ஆகும்.

⭐ Additional Information

திருக்குறள்:

- ஆசிரியர்: **திருவள்ளுவர்**
- பாவகை: **குறள் வெண்பா**
- அதிகாரம்: 133
- குறள்கள்: 1330
- பால்கள்: 3
- இயல்கள்: 9
- சிறப்புப் பெயர்கள்: **பொதுமறை, தமிழ் மறை, உலகப்பொதுமறை, முப்பால் நூல், உத்தரவேதம், தெய்வ நூல், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, திருவள்ளுவ பயன், பொருளுறை, முதுமொழி, திருவள்ளுவம், தமிழர் திருமறை, தமிழ் மாதின் இனிய உயர்நிலை, அறவிலக்கியம்.**
- திருவள்ளுவர் காலம்: **கி. மு. 31ஆம் நூற்றாண்டு.**
- திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள்: **மணக்குடவர், தாமத்தர், நச்சர், மல்லர், பரிப்பெருமாள், கலிங்கர், பரிமேழலகர், பரிதி, திருமலையர்.**
- திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு **1812** ஆகும்.
- திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் **தஞ்சை ஞானப்பிரகாசம்** ஆவார்.

---

100. **Answer: b**

Prepp Download Prepp APP GET IT ON Google Play

**Explanation:**

சரியான பதில்: (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

★ Key Points

| | |
|---|---|
| பயனில்லாத களர் நிலம் | கல்லாதவர் |
| புகழாலும் பழியாலும் அறியப்படுவது | நடுவுநிலைமை |
| புலிதோல் போர்த்திய பசு | மனதை அடக்க இயலாதவர் |
| வருமுன்னர் காவாதான் வாழ்க்கை | எரிமுன்னர் வைத்தூறு |

★ Additional Information

திருக்குறள்:

- அதிகாரம்: கல்லாமை
- 'உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக் களர்அனையர் கல்லா தவர்'.
- அதிகாரம்: குற்றங்கடிதல்
- 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்'.
- அதிகாரம்: நடுவுநிலைமை
- 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்'.
- அதிகாரம்: கூடா ஒழுக்கம்
- 'வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று'.

Prepp Download Prepp APP GET IT ON Google Play